Registered No. M. 8880

"SIDDHANTHAM"

Vol. 43 — No. 2

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 43 | சௌமிய மாசி 1970 பிப்ரவரி | இதழ் 2

உள்ளுறை பக்கம்

இதழாசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழு அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் 12, கீழமாட வீதியிலுள்ள சமாஜ அலுவலகத்தில் 1–3–70 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, மாதக்கூட்டம், பிற பொருள்கள் பற்றி ஆலோசிக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் எல்லோரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகின்றனர். (செயலாளர்)

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாஜ உறுப்பினர் தங்கள் புத்தாண்டுச் சந்தாத் தொகை ரூ ஐந்தினையும் விரைவில் அனுப்பிவைக்க வேண்டுகின்றோம். வி. பி. பி, யில் இதழை அனுப்பினால் சிலர் திருப்பியனுப்பி விடுகின்றனர். அதனால் சமாஜத்துக்குப் பேரிழப்பு ஏற்படுகின்றது. ஆகவே இவ்விதழைக் கண்டதுமாவது உடனே மணியார்டர் செய்துவிட வேண்டுகின்றோம். சந்தா அனுப்புவோர் 1. தங்கள் முழுப்பெயர் 2. சந்தா எண் 3. தெளிவான முகவரி 4. மாவட்டம் ஆகியவற்றைக் குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழ நாட்டில் உள்ள அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை அரசியலார் இசைவு பெற்றுத் தவறாது அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கின்றோம். மலேயா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை திரு. சிவநேசன் அவர்களிடம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :-

செயலாளர்,

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
12, கீழமாட வீதி,
சென்னை-4.

புலவர். சு. இராமச்சந்திரன், (துணைச் செயலாளர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்) 2/63 பேச்சியம்மன் கோயில் தெரு, வைரவன் செட்டியார் பகுதி, மதுரை-1. அவர்களும், டாக்டர் திரு. ந. சஞ்சீவி எம். ஏ., எம். லிட்., ("நடேசநாராயண நிலையம்", தலையாரித் தெரு, சென்னை-4) அவர்களும் நம் சமாஜ ஆயுள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

Reg. M. 2330 உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 43	சௌமிய ஞூ மாசி பிப்ரவரி 1970	இதழ் 2

ஒலிபரப்புப் பகுதி

சமாஜ மகாநாடு, காஞ்சி.

(ஆசிரியர்)

சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் அறுபத்து நான்காம் ஆண்டு விழா சென்ற டிசம்பர் மாதம் 27, 28 தேதிகளில் காஞ்சிபுரத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதற்கு முன் இந்நகரில் 1936 இல் ஒரு முறை நடந்திருக்கிறது. அப்போது சைவ மங்கையர் மகாநாடு நடைபெறவில்லை. இப்போது விழாவும் மகாநாடும், எல்லா அங்கங்களோடும் நடைபெற்றமை போற்றற்குரியது. திரு. வச்சிரவேல் முதலியார் அவர்களும், காஞ்சி நகரப் பெருமக்களும் பேராதரவு தந்து மிகவும் சிறந்த முறையில் மகாநாட்டை நடத்தித் தந்தமைக்கு எல்லோரும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். மகாநாட்டின் நிகழ்ச்சிகள் தனியே வெளிவந்துள்ளன. சில சிறப்பு அம்சங்களை மட்டும் இங்கே குறிப்பிடுவோம்

முதல் நாள் காலையில் கச்சபேசர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. கச்சபம் என்பது ஆமை. திருமால் கூர்மாவதாரம் எடுத்தபோது இத்தலத்தில் வழிபட்டதாக

வரலாறு. இந்த ஆலயம் மிகவும் பழமை வாய்ந்த பெரிய கற்கோயில். இதன் கிழக்குப் பிராகாரத்தில் விசாலமான பந்தலமைந்து அலங்காரங்களோடு விழா நடைபெற்றது சிறப்பு நிகழ்ச்சி. எல்லா விதத்திலும் அமைதியாகவும், திரளாகவும், ஆர்வத்தோடும் மக்கள் வந்து விழாவில் கலந்து கொண்டனர்.

சைவர் மகாநாட்டுக்குச் சித்தாந்தப் பேரறிஞர் ராவ் சாகிப் நல். முருகேச முதலியார் அவர்கள் தலைமை வகித்தது எல்லா விதத்திலும் பொருத்தமாயிருந்தது. சமீபகாலத்தில் வெளிவந்த அவர்களுடைய சைவ சித்தாந்த ஆங்கிலப் பேருரைகள் (அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு) அவர்களுடைய சமயத்துறை உழைப்பின் பெருமையை நன்கு காட்டும்.

அவர்களுடைய தலைமையுரையில் மிகவும் வலியுறுத்திச் சொல்லிய பொருள் சிவபூசை என்பது. சைவராய்ப் பிறந்தோர் சிவபூசை செய்ய வேண்டும் என்பதை மிகவும் வற்புறுத்திப் பேசினர். காஞ்சிப் புராணத்தில் அம்மையார் ஆகம விதிப்படி ஏகாம்பர நாதனைப் பூசை செய்தார் என்பது மிகவும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. பெரிய புராணத்திலும் சேக்கிழார், ஆகம முறைப்படி அம்மையார் பூசை செய்தார் என்பதை மிகவும் விரிவாகக் குறிப்பிடுகின்றார். திருக்காஞ்சியில் விழா நடந்ததற்குப் பொருத்தமாகத் தலைவர் இத்தலத்து அம்மையார் செய்த பூசையை விரிவாகப் பேசியது பொருளுடையது. பிற்கால இலக்கியங்களில் இப்பூசை எவ்வாறு சிறப்பிக்கப் பெற்றது என்று அவர் காட்டியது, அவரது ஆராய்ச்சி எவ்வளவு விரிவுடையது என்பதைக் காட்டும். சிவபூசையே தவம், அதுவே அர்ச்சனை என்பது அவர் பேச்சின் சாரம். தழுவக் குழைந்த தத்துவத்தை விளக்கியிருப்பதும் மிகவும் பொருத்தமுடையது.

வெள்ளை வாரணனர் திருமுறைகளில் ஆங்காங்கு காணப்படும் சாஸ்திரக் கருத்துக்கள் சிலவற்றைத் தொகுத்

துச் சொல்லியது பாராட்டத்தக்கதாயிருந்தது. 'அப்பாலும் அடிச்சார்ந்தார்' என்ற தலைப்பில் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் பேசிய கருத்து உண்மையானது. அதாவது, சமயத்தால் அப்பாலுள்ளவர்களும் கூட அன்புள்ளமும் இறையுள்ளமும் பெற்றிருந்தால் அவர்களும் சைவருடைய போற்றுதலுக்குரியார் என்பது உண்மை. இதையே 1940-இல் மயிலம் சைவ சித்தாந்த மகா சமாஜ இளைஞர் மகாநாட்டில் தலைமை வகித்து யாமும் பேசியிருக்கிறோம். உலகத்தில் எந்த நாட்டில், எந்த மொழியில், எந்தக் காலத்தில், எந்தச் சமயத்தில் பிறந்திருந்தாலும், ஒருவர் தெய்வ பக்தியும் உயிர்கள் மாட்டு அன்பும் உடையவராயிருந்தால், அவரும் சைவ நாயன்மார் போல வணக்கத்துக்குரியார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் காலையில் சமாஜத்தார் காமாட்சியம்மை ஆலயத்தில் வழிபாடு செய்தது சிறப்பு. மாலையில் அறநிலையத்துறை அமைச்சர் வந்திருந்து வாழ்த்துரை கூறியதோடு, அப்போதைய தலைவர் அருணை வடிவேல் முதலியார் அவர்கள் சொற்பொழிவை இறுதிவரை இருந்து கேட்டார். அதனோடு அமையாது, சைவத்தினுடைய மேம்பாட்டுக்காகச் சமாஜத்துக்குத் தாமும் தமது ஆட்சித்துறையும் வேண்டிய உதவிகள் செய்வதாகவும் வாக்களித்தார். அதுபோல அறத்துறை ஆணையர் நரசிம்ம முதலியார் அவர்களும் அன்று கலந்து கொண்டு, ஆழ்வார் நாயன்மார்கள் வரலாறுகளையும் திருமூலர் கருத்துக்களையும் விளக்கிப் பேசியது மிக அழகாக இருந்தது.

இங்ஙனமாக காஞ்சி மகாநாடு ஒரு சிறப்பான மகாநாடு என்று சொல்லமுடியும். சமாஜத்தாருக்கு, போதிய உறுப்பினர் இல்லாத குறையும் ஆங்கில சைவ சித்தாந்தம் இதழுக்குப் போதிய சந்தாதார் இல்லாத குறையும் பெருங் குறைகள். இக்குறைகளுக்கு அமைச்சர், ஆணையர் ஆகிய இருவர் ஆதரவாலும் தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. மகாநாடு பேசி மட்டும் பயனில்லை;

ஒவ்வொருவர் இல்லத்திலும் சைவ மணமும் சிவபூசையும் விளக்கம் பெற இம்மகாநாடுகள் தூண்டுதல் அளிக்க வேண்டும்; வாழ்க்கையில் சைவம் மலரவேண்டும். இவற்றுடன் ஆட்சித்தலைவர்கள் தந்த உறுதியைத் தொடர்ந்து சென்று சமாஜம் தன் உறுப்பினர் தொகையை யும் ஆங்கில இதழ் உறுப்பினர் தொகையையும் பெருக்கிக் கொள்ளவேண்டும்.

<u>விரிவுரைப்பகுதி</u>

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜ 64-ஆம் சைவ சித்தாந்த மாநாட்டு

வரவேற்புரை

(எஸ். ஆர். டி. சம்பந்த முதலியார்,)
அறங்காவலர், திருவேகம்பம்.

நீல மணிமிடற்றன் நீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்பன் நுதல்விழியன்-தோலுடையன்
கைம்மான் மறியன் கனல்மழுவன் கச்சாலை
எம்மான் இமையோர்க்கு இறை

சீலத்தால் ஞானத்தால் தேற்றத்தால் சென்றகன்ற
காலத்தால் ஆராத காதலால்—ஞாலத்தார்
இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினிதாம்
கச்சிக்கச் சாலைக் கனி. —தண்டியலங்காரம்.

சிவநேயச் செல்வர்களே! செல்வியர்களே!

காஞ்சிபுரத்தில் விளங்கும் மிக முதன்மைவாய்ந்த திருக் கோயில்களுள் ஒன்றான திருக்கச்சபேசத்தில் ஸ்ரீ சுந்தராம்பாள் உடனுறை ஸ்ரீ கச்சபேசப் பெருமாள் திரு வருள் துணையால் நிகழும் சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 64-ஆம் ஆண்டு விழாவிற்கும், 64-ஆம் சைவ சித்தாந்த மாநாடுகளுக்கும், தமிழ்

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், கடல் கடந்த இலங்கை, மலேயா முதலிய இடங்களிலிருந்தும் வருகை புரிந்துள்ள சைவசித்தாந்தச் செந்நெறிச் செல்வர்களே! செல்வியர்களே! எல்லீரும் வருக! வருக! என மாநாட்டின் வரவேற்புக் குழுவின் சார்பில் அதன் தலைவன் என்ற முறையில் தங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றேன்.

உலகிலேயே மிகப் பழமை வாய்ந்தவையாக மதிக்கப் பெறும் நகரங்களுள் காஞ்சிபுரம் ஒன்றாகும். மணிமேகலையில் 'கச்சி மாநகர் புக்க காதை' என்ற ஒரு காதை இருப்பதே அதை மெய்ப்பிக்கிறது.

காஞ்சிபுரம் முத்தி தரும் எழு நகரங்களுள் முதன்மை வாய்ந்தது என்பதை 'நகரேஷு காஞ்சி' என்ற வடசொற்றொடர் குறிக்கிறது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் சீனாவிலிருந்து இந்தியா வந்துசென்ற யாத்திரிகர் யுவான் சாங் காஞ்சிபுரத்தைப் பார்த்து மகிழ்ந்து பாராட்டிச் சென்றுள்ளதை வரலாறு கூறுகின்றது. நகர அமைப்பு முறையில் காஞ்சிபுரம் உலகிலேயே மிகச் சிறந்த இடத்தைப் பெற்று ஒளிர்கின்றது என மேனாட்டறிஞர் ஒருவர் கூறுகின்றார். 1800 ஆண்டுகளுக்கு முன்பிருந்த மாணிக்கவாசகப் பெருமான் தமது திருவாசகத்தில் "தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சி" என்றும் 1300 ஆண்டுகளுக்கு முன்பிருந்த திருநாவுக்கரசு நாயனார் "கல்வியில் கரையிலாத காஞ்சி மாநகர்" என்றும் அருளியுள்ளார்.

காஞ்சிபுரத்தைப் போன்ற சிறந்த கோயில்கள் நிறைந்த நகரம் பிறிதொன்றில்லை. சமணம், பௌத்தம், வைணவம், ஆகிய சமயங்களைச் சேர்ந்த கோயில்களும் இந்நகருக்கு இன்றும் சிறப்புடன் அணி செய்கின்றன. இத்தகு சிறப்பு வாய்ந்த நகரத்தில் நடைபெறும் இம்மாநாட்டிற்குத் தங்களை வருக வருக என அழைக்கும் பேறு பெற்று மகிழ்ச்சியுறுகின்றேன்.

'பழந்தமிழ்ச் சமயமே சைவ சமயம்' 'தமிழர்கள் கண்ட உயர்ந்த நெறியே சைவ சித்தாந்த நெறி' என்பவை உலகப் பேரறிஞர்கள் ஒப்புக்கொண்ட உண்மைகள். வாழ்க்கையோடு இயைந்து நலந்தரும் உண்மைகளைக் கொண்ட நெறியாகிய சைவ சித்தாந்தத்தை நம் முன்னோர் பதினான்கு சாத்திரங்கள் வழியாக அருளிச் செய்தனர். அவைகளுக்கு இலக்கியமென அமைந்துள்ளவை பன்னிரு திருமுறைகளும் வேத ஆகமங்களும். அவற்றையெல்லாம் ஓதியும் உணர்ந்தும் உலகம் நன்மை பெறவேண்டும்; அவற்றிற்கு ஆவன செய்யவேண்டும் என்ற நோக்கத்துடனேயே சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜம் அருள் திரு. ஞானியாரடிகள் போன்ற பெரியார்களால் 64 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பெற்றது.

எல்லாச் சமயங்களும் உயிர்களுக்கு நன்மை செய்வதற்காகவே தோன்றின. எனினும் சில சமயங்கள் உயிரெனத் தனியாக ஒன்றில்லையென்றே கூறுகின்றன. சில சமயங்கள் கடவுளுண்மையையே புரிந்து கொள்ளாமலிருக்கின்றன. சில சமயங்கள் வினையின் ஆற்றலைப் புகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் இறை, உயிர், தளை ஆகிய மூன்று பொருள்களும் உண்டு எனக் கூறி, அவற்றின் இலக்கணங்களையும் எடுத்துச் சொல்லி அறிவில்லாததளை வாளாவிருக்க அறிவுள்ள உயிரே இறை அருளால் அதனினீங்கி இறைவனை, அடைதற்கு இயலும் என்ற பேருண்மையைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது சைவ சித்தாந்தம்.

உயிர்கள் பல. அவை அநாதியே ஆணவ மலத்தில் கட்டுண்டு கிடந்தன. தனது பேரிரக்கம் காரணமாக, ஆண்டவன் அவைகளுக்கு உடம்பைக் கொடுத்தான். எடுத்த உடம்பில் இருக்கும் உயிர்கள் வினைகளைப்புரிகின்றன. அவ்வாறு புரிகின்ற வினைகளுக்கேற்ப மீண்டும் மீண்டும் பிறப்புகளைப் பெறுகின்றன.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்'

பிறந்து இளைக்கின்றன' பின் இறைவன் திருவருளால் இறைவன் திருவடியின் பெருமையை அறிந்து, அதனிடம் பற்றுக்கொண்டு, இறுதியில் அதனையே சென்று சேர்கின்றன. வினையிலிருந்து நீங்கி முதல்வனை அடைவதற்கு ஆண்டவன் அருளே துணை செய்கின்றன. அவன் அருள் துணையிருப்பின் வினைகள் ஓடிப்போகின்றன. திருஞான சம்பந்தர்,

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையால்
உலங்கொள் வினைபோ யோங்கி வாழ்வரே!

என அருளியபடி உயிர்கள் வினையினீங்கி விமலன் திருவடியைச் சேர்கின்றன என்னும் உண்மைகளைச் சைவ சித்தாந்தம்போல் பிறிதி யாதும் விளக்கவில்லை.

சைவ சித்தாந்த சாத்திரம் சொல்லும் உண்மைகளைப் பேசவும், அதில் கூறும் முறைப்படி நடக்கப் பயிற்சி பெறவும் மாநாடுகள் நடத்துகிறோம். திருக்கோயில்கள் செம்மையாக நடைபெற்றால்தான் யாவும் இனிமையாக நிகழும். எனவே, இம்மாநாட்டில் நாடு நலனுற உயிர்கள் உய்திபெற, யாவற்றையும் ஆராய்ந்து சித்தாந்த சைவத்திற்கும் திருக்கோயில் வழிபாட்டிற்கும் ஆவன வற்றைப் பேசி முடிவு செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இம் மாநாட்டிற்குத் தலைமை ஏற்க இசைந்துள்ள இராவ் சாகிபு திரு. நல். முருகேச முதலியார் அவர்களது நுண்ணிய சைவ சித்தாந்தப் புலமையையும் செயல் திறமையையும் தமிழ் உலகம் நன்கு அறியும். மங்கையர் மாநாட்டுத் தலைவியர் வித்துவான் திருமதி. ப. நீலா அம்மையார்

தமது சீரிய ஒழுக்கத்தாலும் செந்தமிழ்ச் சொற்பொழிவுகளாலும் பல்லாண்டுகளாகச் சைவத்தை வளர்த்து வருகிறார்கள். இன்னோர் மாநாட்டுத் தலைவர் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் சைவப் பொலிவுடன் என்றும் விளங்கி எல்லோரையும் நன்னெறிப் படுத்தும் ஆற்றல் வாய்ந்தவர்கள்.

தமிழக அரசின் அறநிலையப் பாதுகாப்புத்துறை அமைச்சரும், ஆணையரும் இம் மாநாடு சிறப்புற நடப்பதற்கு வேண்டிய ஆசிகளை அருளியதுடன் வருகை புரிந்தும் சிறப்பிக்கிறார்கள். செங்கை மாவட்டத்தின் ஆட்சித்துறைத் தலைவர் அவர்களும், அவருடன் செங்கை மாவட்ட வருவாய் அறுவலரும், வருகை புரிந்து மாநாட்டிற் பங்கு கொள்வது பெருமகிழ்ச்சி தருகின்றது. மாநாட்டில் பல பொருள்கள் பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றிச் சிறப்பிக்க அறிஞர் பெருமக்கள் இசைந்துள்ளனர். அனைவரையும் மாநாட்டின் வரவேற்புக் குழுவின் சார்பில் வருக! வருக! என வரவேற்கின்றேன்.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான் மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

ஸ்ரீ கச்சபேசர் கழலடி வெல்க!

வரலாற்றுப் பகுதி

அமிர்த கணேச முதலியார்

மு. அ.

1969 செப்டம்பர் மாதம் சி. அமிர்த கணேச முதலியார் காலமானார் என்று நம பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாயிற்று. இவர் சமாஜ அங்கத்தினரும் பேரன்பருமாயிருந்தவர். இவரைக் குறித்த சில செய்திகளைத் தெரிவிக்க இக்குறிப்பை எழுதுகிறோம்.

இவர் தஞ்சாவூர் மாவட்டத்தில் பிறந்தவர்; சைவ வேளாளர். பி. ஏ. பட்டம் பெற்ற பிறகு மாயூரம் பகுதியில் ரெவின்யூ இன்ஸ்பெக்டராக வாழ்க்கை தொடங்கினார். அது நாற்பது வருடங்களுக்கு முந்திய காலம். உத்தியோகம் குறைந்த தரமாக இருந்தாலும், அந்தப் பகுதியில் மக்களுக்கு நன்மைகள் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். இவர் இந்தப்பகுதியில் இருந்துகொண்டு, மாயூரம் தாலுகாவில் பல கிராமங்களுக்கு முடிந்த வரையில் நல்ல நீர்ப்பாசன வசதிக்கு ஏற்பாடு செய்ததை, சில கிராமத்தார் இன்னும நினைவு வைத்திருக்கிறார்கள். பின்னர் இவர் அரசாங்க அலுவலில் சில நகரசபைகளில் ஆணையாளராக இருந்து, படிப்படியாக முன்னேறி, கடைசியில் அரசாங்க உதவிக்காரியதரிசி என்னும் பதவிக்கு உயர்ந்து, அதிலிருந்து ஓய்வுபெற்றார். அதன்பின் செஞ்சிலுவைச் சங்கத்தின் கௌரவக் காரியதரிசியாக இருந்து, பல துறைகளில், நாட்டில் துன்புற்றார்க்கெல்லாம் செஞ்சிலுவையின் உதவியை அளித்தார். அதிலிருந்து விலகியபின், மாயூரத்திலும், பின்னர் கோயம்புத்தூரிலுமாக இருந்து காலமானார்.

இவர் நகரசபை கமிஷனராக இருந்த காலங்களில் அநேக சங்கங்களைத் தோற்றுவித்தார். எப்போதும், எங்கு இருந்தாலும் தமிழ்வளர்ச்சிப் பற்றியே பேசிக்கொண்டிருப் பார். அதற்கென்றே தமது நேரமெல்லாம் செலவிட்டார். தமிழ்கல்ச்சர் என்ற ஆங்கிலப் பத்திரிகை வெளிவந்த காலத் தில், அதற்கு முக்கியப் பொறுப்பேற்றவர்களில் இவரு மொருவர். யாருடனும் இனிமையாகப் பேசிப் பல நற்காரியங்களை நடத்திவைத்திருக்கிறார்.

இவருடைய தமிழ் ஈடுபாட்டிற்கு ஒரு காரணம் இவரது தாய்வழிப் பாட்டனார் ஆகிய ஐ. சாமிநாத முதலியார் ஆவர். இவர் சிறந்த தமிழ்ப் புலவராய்ச் சென்ற நூற்றாண்டின் பிற் பகுதியில் விளங்கினார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணாக்கரான தியாகராசச் செட்டியாரிடம் இவர் கல்வி பயின்றார். சூரியனார் கோயில் ஆதீனத்தலைவ

ராய் மிகப்பிரசித்தி பெற்றிருந்த முத்துக்குமாரசாமி தேசிக சுவாமிகள் இவருக்கு ஞானகுரு. பின்னர் டாக்டர். சாமிநாத ஐயருடன் பழகிச் செய்யுள் இயற்றும் பழக்கத்தைப் பெருக்கிக் கொண்டார். அக்காலத்தில் தருமபுரத்துத் தம்பிரானாக இருந்த சண்முகத்தம்பிரான், திருப்பனந்தாள் சோமசுந்தரத்தம்பிரான் முதலியோருடைய நெருங்கிய தொடர்பும் வைத்திருந்தார். பலதோத்திர நூல்களை இவர் பாடினாரென்று தெரிகிறது. பின்னர் தேசிகர் சொல்ல அவர் சாவித்திரி வெண்பா என்ற ஒரு சிறுகாவியம் இயற்றினார். இது 228 வெண்பாக்கள் உடையது. களவெண்பாமரபில் வந்த ஒரு நல்ல சிறுநூல். இதற்கு ஐயவர்களும், மேற்கூறிய சண்முக சுவாமிகளும் சிறப்புப்பாயிரம் கொடுத்திருக்கிறார்கள். முத்துக்குமார தேசிக சுவாமிகள் இவ்வெண்பாவைக் கைப்பிரதியாக இருந்தபோது பார்த்து அதன் நூல் நயத்தை மெச்சி, அச்சிடுமாறு வற்புறுத்தி அளித்த சிறப்புப்பாயிரப் பாடல்கள் பின்வருவன:

சர்க்கரையோ கற்கண்டோ நாவில் தெளிதேனோ
வர்க்கக் கனிஇரத வான்பிழம்போ-சொர்க்கமலி
புத்தமுதோ வென்னப் புலவர்கொள்வர் உன்றன்சா
வித்திரிவெண் பாவை வியந்து.

தோமிலா இந்நூற்குத் தோமுரையா ரேயெவருஞ்
சாமிநா தப்பெயர்கொள் சால்புள்ளோய்-ஆமிதனை
எல்லோருங் காண இனிதாக அச்சிடுவித்
தெல்லோர்க்கு மீவை யினிது

இந்நூல் சாமிநாத ஐயர் பார்வையிட்டு துரைசாமிப் பிள்ளையால் 1901 இல் அச்சிடப் பெற்றது. பின்னர் இவர் சகுந்தலை வெண்பா என்ற ஒரு நூல் பாடினார் என்றும், அது அக்காலத்து ஒரு பண்டிதரிடம் படிக்கக் கொடுத்துக் கைதவறிப்போய் வேறுபெயருடன் அச்சிட்டு வெளிவந்தது என்றும் அமிர்த கணேச முதலியார் சொல்லியிருக்கிறார்; பிற்காலத்தில் இதைப்பெறுவதற்குத் தாம் எவ்வளவோ முயற்சி செய்தும் கிடைக்கவில்லை என்றும் சொன்னார்.

பவத் தொடக்கை வெல்வாம்!

பசு- பால. நடராசன், பி. ஏ.,

"இப்படி யன்றிக் கன்மம் உயிர் இறை வே(று) உண்(டு) என்று
செப்பிடும் அவர்க்கு மண்ணே! செய்திடும் குற்றம் என்னே?
ஒப்பிலா மலடி பெற்ற மகனொரு முயற் கொம்(பு) ஏறித்
தப்பிலா காயப் பூவைப் பறித்தமை சாற்றி னரே."

(சித்தி. பரபக்கம்)

இது உலகாயதன் கூற்று. உலகாயதன் பேச்சே இப்படித் தான் இருக்கும். 'நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்து இருக்கிற இவ்வுலகத்தில் எத்தனை கோடி இன்பம் காணப் படுகிறது. அவற்றை இம்மையிலே இன்னும் இப்போதே துய்க்கத் தெரியாது கட்புலனுக்கு எட்டாதனவற்றைக் கன்மமென்றும் உயிரென்றும் இறையென்றும் பேசி வாணாளை வீணாக்குவர் சைவர். அது மகவீனு மலடி ஒருத்தி பெற்ற குழந்தை ஒரு முயற் கொம்பின் உச்சிவரை ஏறி ஆகாயத்தில் அலர்ந்த தாமரைப் பூவைப் பறித்தது என்ற உண்மை யற்ற பொருத்தமற்ற கதையினைப் போல இருக் கிறது. இன்பம் துய்க்கப் பிறந்த மக்களிடத்தில் இப்படிப் பேசிப் பிழைத்தற்கு (தவறு செய்வதற்கு) அவர்கள் என்னபாவம் செய்தார்கள்? ஒருபாவமும் செய்திலரே! என மிகவும் சுவைபட நம்மைப்பரிகசிப்பர் உலகாயதர். இதற்குச் சைவர்கள் "இக்கூற்றெல்லாம் பொய்; இளமை யும் யாக்கையும் செல்வமும் நிலையா; எனவே என்றும் நிலைபேறுள்ள இறைவனிடத்தில் என்றும் நிலையான இன்பத்தைத் துய்க்க நாம் முயல வேண்டும். அது நமக்குக் கூடும்' என விடாப் பிடியாக வலியுறுத்தத் தொடங்கினர்.

உலகாயதர் கூறும் இன்பமும் எல்லோர்க்கும் ஒரு மாதிரியாகக் கிடைப்பதரிதன்றோ? கிடைக்குமானால் அது இரந்துகோள் தக்கது உடைத்தாம்! ஆனால் இம்மையிலும் இன்பம் நலிய மறுமையிலும் துன்பம் மலியப் பெற்று விட்டோமானால் நாம் இறைவனிடத்தில் 'சாதல் பிறப் பென்னும் தடஞ்சுழியில் வீழ்ந்து ஆற்றேன்' என்று இறைஞ்சுவோம். பொதுவாக இம்மை உண்டேல் மறுமை

உண்டு. இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அற நிலைப் படித்தானே உலகம் இயங்குவதாகப் புறநானூறு பேசுகிறது.

அப்படியானால் 'பிறப்பதற்கே தொழிலாகி இறத்தலை' அறுக்க வேண்டும். பிறவி இறவிகளை அறுக்க வேண்டும். பவத்தொடக்கை வெல்லவேண்டும். பவத் தொடக்கை வெல்லும் வழி யாது? பரனைப்பயின்ற பரஞ்சோதி மாமுனிகள் ஒருபாடலிலே பவத்தொடக்கை வெல்லு மாற்றினை அருளிச் செய்கின்றார்கள்.

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறைஆ றங்கமுதற்
கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கு
அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து
காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத்
தொடக்கை வெல்வாம்."

பரஞ்சோதி முனிவரர் தென்முகக் கடவுளைத் தொழு மிடத்து, அவனைத் தொழும் நெறியினையும், அதனால் தொழுவார் பெறும் பேற்றையும் அருளிச் செய்கிறார். இறைவனுடைய இயற் பண்புகளை அடுக்கி அடுக்கி வியத்தகு நிலையில் கூறி நம் ஞானக் கண்களைத் திறந்து வைக்கிறார். அவற்றைச் சிறிது விளக்கிக் காட்டுவாம்.

வாக்கிறந்த பூரணமாய் மறைக்கு அப்பாலாய்.

இறைவன் மாற்றம் மனங்கழிய நின்றவன். வேதங் களாலும் சுட்டப் பெறாதவன். வேதமும் 'ஐயா' என ஓங்குமாறு ஆழ்ந்து அகன்ற நுண்ணியனாக இருக்கிறான். சிந்தையும் செல்லாச்சேட்சியன். அவனை அறி கருவி களாலும் அளவைகளாலும் அறியமுடியாது. பசு ஞானத் தாலும் பாச ஞானத்தாலும் அறியமுடியாத அகண்ட பரிபூரண பொருள். "பூரணன் காண் புண்ணியன் காண் புராணன்தான் காண்" எனும் (திருக்காளத்தி தாண். ௩)

தேவாரமும் பூரணமாய் இருக்கிற இறைவனைப் போற்றிற்று.

> "கரையற்ற சத்தாதி நான்கும் கடந்த
> சொரூ பத்தினன் சொல்லிறந் தோமே."
>
> (திருமந்திரம் 1567)

என்றும்,

> "உரையற்ற தொன்றை உரைசெயும் ஊமர்காள்
> கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ" (2915)

என்றும் திருமந்திரம் கூறுகிறது. உரையற்ற தொன்று, கரையற்ற சத்தாதி (நான்கு ஓசைகள்) நான்கும் கடந்த சொரூபம், கரையற்ற தொன்று போன்ற திருமுறைத் தொடர்களின் கருத்தையே முனிவரர் தம் அநுபவத்தோடு சேர்த்து வாக்கிறந்த பூரணமாய் என எழுதுகிறார்.

எல்லாமாய்

உலகம், உலகியற் பொருள், உடல் உடலை யியக்கி உள்ளிருக்கும் உயிர் ஆகிய எல்லாப் பொருள்களுமாய் அவற்றோடு கலந்து நிற்பதால் எல்லாமாய் எனவும்

அல்லதுமாய்

இவற்றொடு கலந்து நிற்பினும் பொருள் தன்மையால் 'பேரறிவும் பேராற்றலும் பேரருளும் பேரின்பமும் முதலாய குணங்களால் வேறுபட்டு இவற்றிற்கு வேறாய் நிற்கும் தன்மையால் அல்லதுமாய் எனவும்

இருந்தத(ன்)னை

இவற்றோடு இயக்கி உயிர்க்கு இயக்கத்தோடு உணர்வும் விளங்கும் படியாகச் செய்து நீக்கமறக் கலந்து நிற்கும் தன்மையில் தானேயாய் உள்ள தன்னை அவற்றிற்குத் துணைபுரியும் நிலையினால் உடனுமாய் இருந்த தன்னை எனவும் உரை விரிப்பார் கழகப் புலவர் இராமநாத பிள்ளை அவர்கள். இறைவன் ஒன்றாகவும் வேறாகவும் உடனாகவும் இருத்தலை விளக்கிய வாறு.

இருந்ததனை என்ற கூட்டுச்சொல்லை இருந்த+தன்னை எனவும் இருந்து+அதனை எனவும் அறிஞர் பிரித்துப் பொருள் காண்பர். இறைவன் எல்லாமாய் இருந்ததை அப்பர்சுவாமிகள்,

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியுங்
காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமாயட்டமூர்த்தியாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும் பிறருருவும்
தம்முருவுந் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிகள்
நின்றவாறே"

என்ற திருப்பாசுரத்தாலும், இறைவன் அல்லதுமா யிருத்தலை,

"விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேதவிதியல்லர் விண்ணு
நிலனும்
திரிதரு வாயுவல்லர் செறுதீயு மல்லர் தெளிநீரு மல்லர்தெரியில்
அரிதரு கண்ணியாளை ஒருபாகமாக அருள் காரணத்தில்
வருவார்
எரியர வாரமார்பர் இமையாருமல்லர் இமைப்பாருமல்லர்
இவரே"

என்ற திருப்பாசுரத்தாலும் விளக்கி யிருக்கிறார்கள்.

"பூதங்களல்ல பொறியல்ல வேறு புலனல்ல உள்ளமதியின்
பேதங்களல்ல இவையன்றி நின்ற பிறிதல்ல வென்று பெருநூல்
வேதங்கிடந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப கூடல் மறுகிற்
பாதங்கள் நோவ வளை இந்தனுதி பகர்வாரை ஆயுமவரே"

என்ற கூடற்காண்ட முதற் பாசுரத்தாலும் அறிக. இறைவன் உடனாயிருத்தலை,

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே, அடக்குவித்தால்
யாரொருவர் அடங்காதாரே,
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே, உருகுவித்தால்
ஆரொருவர் உருகாதாரே,
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே, பணிவித்தால்
ஆரொருவர் பணியாதாரே,
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே, காண்பார்ஆர்
கண்ணுதலாய் காட்டாக்காலே"

என்ற தனித்திருத்தாண்டகம் விளக்கிற்றும்.

இருந்தபடி இருந்துகாட்டி

தோன்ருத் துணையாய் நிற்கின்ற முறையில் தான் சிறிதும் அசைவின்றி உலகு உடல் உயிர்களை அசைவிக்கும் இயல்பினை உணர்த்துகின்ற முறையில் தடந்த வடிவத்தோடு கூடிய தென்முகச் செல்வர் கோலத்து அசைவற அமர்ந்து இருக்கும் இயல்பினுல் காட்டி.

சொல்லாமல் சொன்னவரை

சொல்லாமல் சொல்லுதல் பேசாமல் பேசுதல் போன்றன காதலர்க்குரியன. அவர்கள் தமக்குள் சொல்லாமற் சொல்லிக் கொள்வதனுல் ஏற்படும் இன்பம் சொல்லாற் சொன்னுல் ஏற்படாது! அன்றி அவர்கள் பேசுவது கிளக்கும் தகைமையதோ? கிளந்தால் சுவை சிறிது கெடுமல்லவா? அதுபோல ஒரு மாணவனும் ஒரு ஞானுசிரியனும் தம்முள் தலைப்பட்டு ஞானப்பொருள்களை ஆராய்ந்து தெளியும் போதும், தன் ஆசிரியன் குறிப்பால் சுட்டுவனவற்றை மாணவன் பலவாக விளங்கிக் கொள்ளும் போதும் அவர்களிடையே எல்லையில்லாத இன்பம் பெருகுகிறது. அம்மாணவன் தன் ஆசிரியர் சொல்லாமல் (குறிப்பால்) சொன்னதைக் கேட்டுச் (புரிந்து கொண்டு) சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடுவனும்.

மற்ருெரு பொருளும் உண்டு. இறைவன் ஞான வடிவினன். அவனுக்கு யாரும் எப்பொருளைப் பற்றியும் அறிவு கொளுத்தியது கிடையாது. 'கலை ஞானம் கல்லாமே கற்பித்தான்' எனத் திருத்தாண்டகமும் தெருட்டுதலினுல் 'இறைவன் தனக்குயாரும் எதையும் சொல்லாமல் தானே ஆன்மவர்க்கத்திற்கு அருள் கொண்டு அவை உய்யு நெறியைச் சொன்னுன்' என்ற கருத்தையும் உட்கொண்டு இத் தொடர் பொலிதல் காண்க.

நினையாமல் நினைந்து

மறந்து நினையாமல் ஒரே நினைவாய் இடையருது நினைக்கும் நினைத்தலை நினையாமல் நினைத்தலெனக் கூறுவர். மறப்பதற்குக் காரணம் உணர்வு பொருளோடு நீங்கா

மல் ஒட்டியிருக்க வேண்டிய நிலையை விட்டு நீங்கி யிருப்ப தாகும். திருக்கோவையாரில்,

'உணர்ந்தார்க்கு உணர்வரியோன் "தில்லை"ச் சிற்றம் பலத்தொருவன்' எனத் தொடங்கும் திருப்பாட்டில் உணர்வோடு ஒட்டி யிருப்போருக்கு மனம் முதலிய கருவிச் செயல்கள் நீங்கி விடும் எனக் காணப்படுவதால் அதுவே நினையாமல் நினைத்தல் என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர்

இவ்வாறு சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத்தொடக்கை வெல்வாம் எனச் 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர்; சிவபுரத்தில் பல்லோரும் பணிந்து ஏத்தச் சிவனடிக்கீழ் உள்ளார்' என மணிவாசகனார் கூறுதல் போலப் பொருள் உணர்ந்து சொல்லுவார் பவத் தொடக்கை வென்று சிவஞான ஆனந்தவாரியுள் சிக்கித் திளைப்பர் என்பது திண்ணம், அது அடையவேண்டுவதுமாம்.

II ஓதலுடையார்!

இந்த ஞானம் பழுநிய திருப்பாடல் மூவகை ஆருயிர் வர்க்கத்தில் எவ்வகை உயர் வர்க்கம் சிறப்பாக ஓதிப் பயனடைதற்குரியது என்ற ஆய்வும் நமக்கு இன்பம் அளிப்பதாகும் இப்பாடல் விஞ்ஞான கலர்க்கே உரியது என விதந்து ஓதுவார்சிலர். நினைவு மறவு அற்றநிலையில் இடையீடின்றி நினைக்க வல்லவர் மாயாகன்மமற்ற விஞ்ஞான கலரே ஆவா. அன்னோர்க்கே இறைவன் அருவ மாய் உள்நின்று உணர்த்துவான. அவன் எல்லாமாய் அல்லதுமாய் இருந்த அவ்வருவுருவ நிலையை ஒருமல முடையாரே உணர்ந்து கொள்ளமுடியும் என்று அவர்கள் கூறுவர்.

வேறுசிலர் இப்பாடல் பிரளயாகலர்க்குரியது எனக் கூறுவர். இறைவனுடைய வடிவபேதங்களில் ஒன்றாகிய தெய்வீக–தட்சிணாமூர்த்தி–வடிவில் நேர்தடத்தமாய் வந்து அருள்புரிந்தமையால் இது இருமல முடையார்க்கெனறூர்.

ஆனால் இப்பாடல் சகலர்க்கும் உரித்தாம். நாம் மூவகையில் எவ்வகையினர் என்று ஆராயத் தொடங்கினால் அது மலகாரியமாய் முடியுமேயொழிய ஆய்வினால் தெளிய முடியாதாகலின் எல்லோரும் இத்திருப்பாட்டை விளங்கிக் கொண்டு வெற்றிக்கு முயலுவோமாக.

தேவார திருவாசக வேதஆகமங்களின் மூலப் பொருளாம் பதிப்பொருளை முனிவரர் எளிதாக விளக்கியருளினார்கள். 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவனை வணங்கினால் தான் வினையிலிருந்து நீங்கி உய்ய முடியும்; பிறப்பிலியை வணங்கினால் தான் பிறப்பறுக்க முடியும்' என்ற கருத்தினைத் தெருட்டி அருளினார்கள்.

III சாதனையியல்

முனிவர் கருத்தைச் சொல்கிற முறைமையும், அவர் தம் பாடல்களின் போக்கும் அரியதானவற்றையும் கூட 'சாதனைக்கு மிக எளியதே' என நம்மைத் துணியத் தூண்டும். சாதனைக்கு அரிதானவற்றையும் நாம் முயல நம்மையும் ஊக்குவிக்கும் இயல்பிற்றும் அவர்தம் மொழியின் பண்பு. பவத்தொடக்கை வெல்வாம் என்று தாமும் சொல்லிச் செய்து, நம்மையும் சொல்லிச் செய்யத் தூண்டுகிறார். நாம் பாடலின் பொருளை உணருமாறு எளிதாகக் கூறி அதன் பொருளை நினைக்கச் செய்கிறார். நினைக்கவல்லவரை முயற்சிசெய்யத் தூண்டுகிறார். முயற்சியுடையாரை முயற்சியினின்று வழுவாது இருக்கத்தூண்டுகிறார்.

நினைப்பதே நியமமே!

"போற்றி என்வாழ் முதல் ஆகிய பொருளே" என்பார் மணிவாசகர். நம்முடைய வாழ்க்கைக்கே ஆதாரமாக இருப்பவன் இறைவன். எனவே நாம் அவனுக்காக அவனால் அவனுடைய (For Him, by Him, of Him) துணைகொண்டு வாழ்கிறோம் என்று நாம் முக்காலத்தும் மாறாது நினைக்க வேண்டும். அப்போது நாம் அவனுடைய நினைவிலேயே வாழ்வதாக ஆகும். அவனை நினைத்தலின்றி வேறு தொழில் இல்லை; அவனை நினைப்பதே நியமம் ஆகும். இதனையே,

"பொன்தயங்கிலங் கொளிர் நலங்குளிர்ந்த புன்கடை
பின்தயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் சூடலால வாயிலாய்
நின்றயங்கி ஆடலே நினைப்பதே நியமமே."

எனத் திருஞானசம்பந்த மூர்த்திகள் வலியுறுத்துகின்றார் கள். எனவே நாம் ஒவ்வொருவரும் 'எல்லாம் ஆகி அல்லது மாய் நின்ற எம்பெருமானை நினையாமல் நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்.' என்றும் 'பரமனை நினைக்க நம்மை ஆற்றுப் படுத்திய பரஞ்சோதிமாமுனிவரை நினையாமல் நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்' என்றும் கூறி நினைந்து வாழ்வோமாக.

திருச்சிற்றம்பலம்.

சமயப் பகுதி

திருக்கோயிலில் வழிபாட்டுச் சீர்திருத்தம்

நல்-மு.

சைவசித்தாந்த மகா சமாஜம் சுமார் 40 ஆண்டுகட்கு முன் திருக்கோயில் வழிபாட்டுச் சீர்திருத்தங்களைப் பற்றிச் சிந்தித்துள்ளது. கீழ்க்காணும் வாசகம் சமாஜத்தின் பொன் விழா மலரில் (1955) காணப்பெறும்:–

"சமாஜம் தனது 24-ஆம் ஆண்டில் (1929) பெரியதோர் அறிவுத் தொண்டைச் சிறப்புற ஆற்றிச் சைவ உலகிற் கோர் பேருபகாரம் செய்தது. அக்காலத்தில் தன்மதிப் பியக்கம் எழுப்பிய சிக்கல்களைப் பற்றியும் பிறசில பூசல்களைப் பற்றியும் தக்கார் ஆராய்ந்து உண்மையான முடிவுகளைத் தெளிவாக எடுத்துரைத்து நல்வழி காட்ட வேண்டிய அவசியமிருந்தது. அதற்காகச் சைவ அறிஞர் தனிக் கூட்டம் ஒன்றைக் கூட்டவிரும்பி முதலில் சைவப் பெரியார் தனிக்கூட்டத்தின் அவசியமும் வேலையும் என்னும் தலைப்பில்

சமாஜ உதவித்தலைவர் எழுதிய ஒரு விண்ணப்பத்தை அச்சிட்டு சைவ அறிஞர்கள் பலர்க்கு அனுப்பியது. ஆராய்ச்சியைத் தூண்டி நெறிப்படுத்தற்காக 25 வினாக்கள் அதிற்குறிக்கப்பட்டன. 1929 மார்ச்சு 29, 30, 31-ஆம் தேதிகளில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் திருநல்வேலியில் சைவப் பெரியார் தனிக் கூட்டம் ஒன்று கூடியது. அதில் நடந்த ஆராய்ச்சிகளில் 35 சபைகளிலிருந்து வந்த பிரதிநிதிகள் 90 பேர் கலந்து கொண்டனர். ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், மறைமலை யடிகள், சர். டி. என். சிவஞானம் பிள்ளை, திரு டி. இலக்கு மணப் பிள்ளை முதலிய 18 அறிஞர்களும் இரண்டு சங்கங் களும் தங்கள் கருத்துக்களை எழுதியனுப்பி இருந்தனர்.

சைவப் பெரியார் தனிக்கூட்டம் தனது கருத்துக்களை 20 தீர்மானங்களாக வெளியிட்டது. இத்தீர்மானங்களைப் பற்றி சமாஜக் காரியதரிசி ம. பாலசுப்பிரமணியனார் எழுதிய விளக்கக் குறிப்புகளும் 'சித்தாந்தத்தில் தரப் பெற்றன. பின்பு அதே ஆண்டு மே மாதத்தில் 16-ம் தேதி முதல் ஆறுநாள் திருப்பாதிரிப்புலியூரில், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் ஆதரவில் உயர்திரு மறைமலையடிகள் தலைமையில் பெருஞ் சிறப்புடன் சைவர் மாநாடு நடை பெற்றது. நெல்லைக் கூட்டஞ் செய்த தீர்மானங்கள் நன்கு விளக்கப் பெற்று சிலசிறு திருத்தத்துடன் இம்மாநாட்டில் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இப்பெருமுயற்சி களால், சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளும் சமய ஒழுக்கங்களும் செய்யவேண்டிய சமயப் பணிகளும் சமய ஒழுக்கங்களும் இவையெனப் பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது''

இத்தகைய கூட்டத்தில் திருக்கோயிலில் வழிபாட்டுச் சீர்திருத்தங்களைப் பற்றியவை பின்வருமாறு:—

"9 சைவ சமயிகளுள் சைவ ஆசாரமுடைய எம்மரபி னர்களுக்கும் ஆலயவழிபாடு முதலிய சமய உரிமைகள் சமமாயிருத்தல் வேண்டும்.

10 ஆலயத்தில் சென்று வழிபடும் மக்கட்குக் கடவுள் சந்நிதியில் எவ்வகையான உயர்வு தாழ்வுகளும் பாராட்டப் படுதல் கூடாது.

13 திருக்கோயிலில் செய்ய வேண்டிய சீர்திருத் தங்கள்:—

4 தக்க ஆதிசைவர்கள் கிடையாத விடத்துத் தகுதி யுடைய ஏனைச் சைவ சமயிகள் வாயிலாகப் பூசனைகளை நடத்துதல்''

மேற்கண்ட 40 ஆண்டுகட்கு முன் நிறைவேற்றிய முடிவுகள், தற்சமயம் கிளம்பியுள்ள பிரச்சினைகட்கு ஒரு அளவுகோலாக அமைகிறது. 13 (4) தீர்மானத்தால் ஆதி சைவர்களே திருக்கோயில் பூசனைகள் செய்யத் தகுந்தவர் எனவும், தக்கவர்கள் கிடையாத விடத்துத் தகுதியுடைய ஏனையச் சைவ சமயிகள் வாயிலாக பூசனைகளை நடத்தலா மெனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தகுதியுடைய ஏனைய சைவ சமயிகளைப் பயிற்சி தந்து தேர்ந்தெடுப்பது முதற்கண் செய்யத்தக்க தொன்றாகும். பயிற்சிதரத்தக்க வர்கள் யார் என்பதும் ஆராயத்தக்கது. முன்னாட்களிலும் கூட சில கோயில்களில் பூசனை ஸ்மார்த்தர்களாலும், வீரசைவர்களாலும், பண்டாரங்கள் என்று சொல்லப்படும் ஆண்டிகளாலும் நடத்தப்பெற்று வந்துள்ளது. ஸ்மார்த் தர்கள் வைதீக மந்திரங்களை உபயோகித்து வந்தனர். வீர சைவர்கள் வீராகம மந்திரங்களை உபயோகித்து வருகி றார்கள். மற்றவர்கள் ஆதிசைவர்கள் கூறும் மந்திரங்களில் சிலவற்றைக் கையாண்டனர். இத்தகைய பயிற்சிகள் தரவும், தகுதியைப் பரீட்சித்துச் சான்றளிக்கவும், அரசாங்கம் முற்படவேண்டுமா அல்லது வேறு தாத்தாரா என்பது முக்கியமான கேள்வி. சான்று அளிக்கத்தக்கவர்களும் தகுதி உடையவர்களாக இருத்தல் வேண்டுமென்பது தேற்றம். இவையெல்லாம் ஆழ்ந்து கருத வேண்டிய விஷயங்களாக உள்ளன என்பதை மட்டும் இந்த நோக்கில் கருத்தில் கொண்டிருத்தல் நலம்.

*

மதிப்புரைப் பகுதி

தமிழிலக்கிய வரலாறு

நல். முருகேச முதலியார்

[தமிழ் இலக்கிய வரலாறு, பதின்மூன்காம் நூற்றுண்டு, பதினைந்தாம் நூற்றுண்டு — இருநூல்கள். எழுதியவர்: மு. அருணுசலம், கிடைக்குமிடம்: காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், தஞ்சை ஜில்லா, விலை நூல் ஒன்றுக்கு ரூ. 7-50.]

தமிழ் இலக்கிய இலக்கண சாத்திர மெய் வரலாறுகளை யெல்லாம் தற்காலப் பிற மொழி ஆராய்ச்சி முறைகள் பற்றி எழுதுவது பெரிதும் விரும்பத் தக்கது. தமிழ் மிகத் தொன்மை யான மொழி; அதன் இலக்கிய வரலாறும் இரண்டாயிரம் ஆண்டுகட்கும் மேற்பட்டது. எழுத்தும், மொழியும் வழக்கும் தொடர்ந்து வந்துள்ளன. ஆனுல் ஆசிரியர்களின் கால நிர்ணயம் இதுவரை சரிவர செய்யப்படவில்லை. சங்க காலம் போக, இடைக்காலமான சுமார் 10 முதல் 15 நூற்றுண்டு களில் பல நூலாசிரியர்களின் காலம் குழப்பத்திலேயே இருந் துள்ளது. எனினும், இந்தக் கால அளவில் பல முறைப்பட்ட இலக்கிய, இலக்கண, சமய நூல்கள் வந்துள்ளன. சுமார் 8 முதல் 10 நூற்றுண்டுகளை இருண்ட காலம் என்று கூறுவது வழக்கம். அக்காரணம் பற்றி. இடைக்காலத்தின் தமிழ் வளர்ச்சியை நுட்பமாக ஆராய்வது மிகப் பொருத்தமே. இது வரை வந்துள்ள வரலாற்று நூல்கள் ஒவ்வொன்றும் தனிச் சிறப்புகள் உள்ளனவாயினும், இலக்கிய வரலாறு எழுதப்பட வேண்டிய முதையை ஒரு வரலாற்று ஆசிரியரும் முழுதும் எடுத்து ஆளவில்லை. விமர்சிக்கப்படும் நூலின் ஆசிரியர், தம் முன்னுரையில் முற்போந்த வரலாறுகளை விவரித்துக்கூறி அவைகளின் குறைகளையும் கூறியுள்ளார். தமிழ் நாவலர் சரிதை, புலவர் புராணம் போன்றவை ஆராய்ச்சிச் சாத னங்கள் கையாளப்படாத காலத்தில் எழுதப்பட்டவை. பூர்ணலிங்கம் பிள்ளை. கா. சுப்பிரமணியம் பிள்ளை, சோம சுந்தர தேசிகர், வையாபுரிப் பிள்ளை, டி. பி. மீனுட்சி சுந் தரம் இவர்கள் எழுதிய காலம், ஆராய்ச்சி முறைகள் விளங் கியகாலம்.

திரு மு. அருணுசலம், சுப்பிரமணியம் பிள்ளை எழுதிய வரலாற்றில் சிறப்பு அதிகமாகக் காணப்படவில்லை யென்றும்

கால நிர்ணயங்கள் பிழைபட விருக்கின்றன என்றும் கூறுகிறார். அவர் பின்பற்றியதும் போற்றுவதும் சோமசுந்தர தேசிகர் முறையே போலும். அதாவது, ஒவ்வொரு நூற்றாண்டாக ஆராய்ந்து நூல்களின் அகச்சான்றுகளையும் சமகாலத்தில் பிறந்த வேறு நூல்களிலுள்ள மேற்கோள் சான்றுகளையும் கொண்டு குறுகிய வரம்புக்குள் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்து, கல்நார் உரிப்பது போல் காலநிர்ணயம் செய்யும் முறையே பயனளிக்கக் கூடியது என்பதை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. இதனுடன் பல ஆய்வாளர்கள் தனி நூல்களுக்கு வரைந்துள்ள ஆராய்ச்சிப் பகுதிகளில் கண்ட செய்திகளையும் (உ-ம் அனவரத விநாயகம் பிள்ளை, சுவாமி நாதையர், வையாபுரிப்பிள்ளை முதலாயினோர்) இந்த ஆசிரியர் கையாண்டு தம் முடிவுகட்கு ஆதாரம் கண்டுள்ளார். தம் முடிவுகளும் முடிந்தவை என்று கருதுதல் வேண்டா வெனவும் மேல் ஆராய்ச்சியால் வேறு உண்மை காணின் மாற்றத்துக்கு இடமுண்டு எனவும் ஏற்கிறார்.

கால நிர்ணயம் முக்கிய மெனினும், இலக்கிய வளர்ச்சியை நோக்குமிடத்தும், நூலின்பம் முழுதும் பெறுவதற்கும் மொழி இலக்கண, இலக்கிய ஆராய்ச்சி மிகமிகத் தேவை. இது இல்லையேல் ஒரு மொழியின் இலக்கிய வரலாறு, சரித்திரக்காரர்கள் தம் நூல்களில் அவ்வக் காலங்களில் இருந்த ஆசிரியர்களின் பெயரையும், நூல்களின் பெயரையும், அவைகளை ஆதரித்த அரசர்கள் பெயரையும் அட்டவணை ரீதியாக எழுதும் முறையாக முடியும். திரு. அருணாசலம் முக்கியமானதும் அவசரமான தேவையாகவும் காண்பது கால நிர்ணயமும் நூல்கள் அச்சிடப்பட்ட காலம் முதலியவையும் ஆகும். இது உண்மையே. இந்த நோக்கத்திலேயே ஆசிரியர் "நூலாராய்ச்சி இப் புத்தகத்தின் நோக்கமன்று. ஆயினும் ஆங்காங்கு ஏற்றபெற்றி சுருக்கமாகவும் விரிவாகவும் நூலாராய்ச்சி செய்யப் பெற்றுள்ளது" எனக் கூறியுள்ளார். பழைய ஆசிரியராயினும் யாழ்ப்பாணம் வடகோவை சபாபதி நாவலர் தம் திராவிடப் பிரகாசிகையில் (1889, மறுபதிப்பு 1927) பாடையியல்பு, இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், சரித்திர மரபியல், ஒழிபியல் என்ற நிறைபெற்ற அங்கங்களுடன் உயர்தமிழ் நடையில் நூல் விளக்கங்கள் எழுதியுள்ளார். இதையொத்த நூல் வேறில்லை என்று கூடச் சொல்லலாம். இந்நூல், விமர்சனம் செய்யப்படும் வெளியீட்டில் குறிக்கப் படவில்லை. பள்ளிக்கூட—கல்லூரி மாணவர்

கட்கு எழுதப்படும் தமிழ் வரலாறுகளில் சமய நூல்களைப் பற்றி முழுதும் விடப்படுவது உண்மையே. தமிழ்ச்சமய நூல்களைப் பொறுத்த மட்டில், அவைகளின் இலக்கிய நயமும் சிறப்புகளும் காணக்கிடையாது என்று அறியாதார்தான் கூறுவர். எனவே, திரு. அருணாசலம், எடுத்துக் கொண்ட இரண்டு நூற்றாண்டுகளில் மிளிர்ந்த சைவம், வைணவம், சைனம், வேதாந்தம் ஆகிய எல்லாச் சமய நூல்களைப் பற்றியும் நுட்பமாக ஆராய்ந்து எழுதி விளக்கம் செய்துள்ளார். சிறப்பாக ஆராய்ந்து காலவரையறை செய்யப்பெற்ற ஆசிரியர்கள் சிற்றம்பல நாடிகள், சம்பந்தமுனிவர், தத்துவப்பிரகாசர், கண்ணுடைய வள்ளல், சிவஞான வள்ளல், சிவாலய முனிவர் தத்துவராயர், தேவேந்திர முனிவர், சச்சியப்ப சிவாசாரியர், கடவுள்மாமுனிவர், காங்கேயர், சாலோத்தர ஆசிரியர், சித்தர்கள் முதலாயினோர். சாத்திர ஆசிரியர்களில் ஒரே பெயர் கொண்டவர் பலர் இருப்பதால் கால நிர்ணயமும் சம்பிரதாயத் தொடர்புக் குறிப்பும் எவ்வளவு சிரமம் என்பது சொல்லாமலே விளங்கும். ஆசிரியர், பல நாள் ஏட்டுச் சுவடிகளையும், பல அச்சுப் பிரதிகளையும் ஆராய்ந்து பல அரிய குறிப்புகளையும் சேகரித்து அளித்துள்ளது பாராட்டத் தக்கது. தமிழ் வரலாறு எழுதுபவர்கள் நூல் பிரதிகளைச் சேமித்தலிலும், பாடபேதங்கள் ஆராய்வதிலும் வல்லுனர்களாக இருத்தல் இன்றியமையாதது. இவ்வாசிரியர் முதல் நூல்களைப்பற்றி மட்டும் எழுதாமல, உரையாசிரியர்கள் பற்றியும். அவர்கள் உரைநூல்களைப் பற்றியும் எழுதியுள்ளார். உரைநூல்களில் மறைந்து போன பல நூல்களைப் பற்றியும், ஆசிரியர்களைப் பற்றியும், பொருள் விவரங்களும் கிடைக்கிறதென்பது பலர் உணர்வதில்லை. சைவ இலக்கியவரலாற்றில் ஈடுபாடுடையவர்கள் ஆசிரியர் செய்துள்ள கந்தபுராணம், திருவாதவூரர் புராணம் ஆராய்ச்சிகளைப்படித்து மகிழ்வார்கள். இன்னும் எத்தனையோ பிரபந்தங்கள், சாத்திரங்கள், முதலியவை பற்றியும் அரிய குறிப்புகளைத் திரட்டித்தந்துள்ளார். நூலின் ஒவ்வொரு பாகத்தின் இறுதியிலும் ஆசிரியர் பெயர், கால அட்டவணை, ஆசிரியர் கால ஒப்புமை அட்டவணை, பரம்பரை அட்டவணை, மேற்கோள் அகராதி, பொருள் அகராதி, சிறப்புப் பெயர் அகராதி ஆகிய இவைகளையும் தொகுத்து அளித்துள்ளார்.

பலர் கொண்ட ஆசிரியர் குழு சேர்ந்து செய்ய வேண்டிய பணியை திரு. அருணாசலம் ஒருவராகவே பலநாள்

உழைத்துச் சாதித்துள்ளார். கூறியது கூறல் போன்ற சிறு குற்றங்கள் காணப்படலாம், ஒருவராகச் செய்த பெரும் சிக்கல் கூடிய பணியில் அவை குறை ஆகா. இம் மாதிரித் தமிழ் இலக்கிய வரலாறு இதுவரை எழுதப்படவில்லை யென்பது உணரத்தக்கது. தமிழுலகமும் சமய உலகமும் இவர் முயற்சியை ஏற்றுப் பாராட்டி ஊக்கம் அளிப்பின், ஏனைய நூற்றாண்டுகளுக்குரிய பகுதிகளும் விரைவில் வரும். இந்திய அரசு சிறுமானியம் கொடுத்தது போதாது. எவ்வாறு யினும், வாசகர்கள் நூலை வாங்கிக் கொடுக்கும் ஆதரவுக்கும் உற்சாகத்துக்கும் அவை இணையாகா. இந்நூல் தமிழன்பர்கள் நூலகங்கள், கல்லூரிகள், முதலிய எல்லாவிடங்களிலும் வாங்கி வாசிக்கத்தக்கது.

1970–ஆம் ஆண்டுக்குரிய சமாசப் பணியாளர்கள்

(காஞ்சிபுரம் மாநாட்டில் தேர்ந்தெடுக்கப் பெற்ற வர்கள்.)

தலைவர் :

திரு. கீ. இராமலிங்க முதலியார் எம். ஏ.

துணைத்தலைவர்கள் :

1. திரு. க. அரங்கசாமி முதலியார் பி. ஏ.
2. திரு. K. E. அருணாசல முதலியார் எம். ஏ., பி. காம்.

செயலாளர் :

திரு. மு. நாராயணசாமி முதலியார்

துணைச் செயலாளர் :

திரு. மா. சிவராமன் பி. ஏ.

பொருளாளர் :

திரு. A. இராமசாமி முதலியார்

சித்தாந்தம் ஆசிரியர் :

திரு. மு. அருணாசலம் எம். ஏ.

சித்தாந்தம் துணை ஆசிரியர் :

வித்துவான் திரு. இரா. சங்கரன்

மாதக் கணக்குத் தணிக்கையாளர் :

திரு V. ஆறுமுக முதலியார்

ஆண்டுக் கணக்குத் தணிக்கையாளர் :

திரு. V. திருநாவுக்கரசு பி. ஏ.

செயற்குழுவினர் :

1. திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் எம். ஏ.
2. திரு. P. திருஞானசம்பந்தம் எம். ஏ., எல். டி.
3. திரு. கொ. நீ. சிங்காரவேலு எம். ஏ.
4. திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்.
5. ,, நே. த. கிருஷ்ணசாமி எம். ஏ. பி. டி.
6. ,, வித்துவான் வை குஞ்சிதபாதம் பிள்ளை
7. ,, வித்துவான் பி. சொ. சண்முகம் பிள்ளை
8. ,, வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் எம்.ஏ.
9. ,, N. குருசாமி பிள்ளை
10. ,, ம. சந்திரசேகர முதலியார்
11. ,, P. M. நாயனுர்
12. ,, G. வடிவேலாயுதம் பிள்ளை எம். ஏ.

பணியாளர் குழு : திருவாளர் & திருமதி

1. க. வச்சிரவேலு முதலியார், காஞ்சி.
2. வைரவப் பிள்ளை, கொழும்பு
3. பு. ரா. சுவாமிநாதன் எம் ஏ., எல். டி. சிதம்பரம்.
4. எஸ். நடராசநாடார் பி. ஏ., பி. எல்.
5. வித்துவான். க. வெள்ளைவாரணனுர், சிதம்பரம்.
6. கு. காமாட்சி அம்மாள் எம். ஏ. சேலம்.
7. எஸ். நாராயணன் செட்டியார், காரைக்குடி.
8. அண்ணாமலை செட்டியார், காரைக்குடி.
9. R. திருநாவுக்கரசு பிள்ளை, குடந்தை.

சித்தாந்தம் ஆசிரியர் ஆலோசனைக் குழு :

1. திரு. க. வச்சிரவேல் முதலியார்
2. ,, எஸ். அம்பிகைபாகன், யாழ்ப்பாணம்.

3. ,, க. வெள்ளைவாரணனார், சிதம்பரம்.
4. ,, ஆ. சுப்பிரமணியம், பொறியர்.
5. ,, ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்.

ஆராய்ச்சிக் கழகம் :

1. மேலைபூர் திரு மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள்.
2. வித்துவான், திரு. சிவப்பிரகாச தேசிகர், சிதம்பரம்.
3. வித்துவான் சொ, சிங்காரவேலனார்.
4. வித்துவான் அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ., எம். லிட்.
5. வித்துவான் அருணை வடிவேலு முதலியார்.
6. வித்துவான் ப சுந்தரேசம் பிள்ளை, குடந்தை.

வெளியூர் ஆலோசனைச் சபையினர் : செங்கற்பட்டு

1. வித்துவான் திருஞானசம்பந்த முதலியார், காஞ்சி.
2. கே. இராசு முதலியார், கைவணடூர்.
3. சி. பாலசுப்பிரமணியம், குன்றத்தூர்.
4. அ. கு. சண்முக முதலியார், காஞ்சிபுரம்.

தென்னார்க்காடு

1. என். எம். பொன்னம்பலம் பிள்ளை, சிதம்பரம்
2. எஸ். இரத்தினசாமி செட்டியார், சிதம்பரம்
3. சிவ. பழமலை, பெண்ணாகடம்

புதுவை

1. சேனாபதி முதலியார்
2. ஆர். எஸ். பழமலை

காரைக்கால்

1. சொ. தட்சிணாமூர்த்தி முதலியார்
2. கே எஸ். எஸ். நடேச முதலியார்

தஞ்சாவூர்

1. விருத்தாசல செட்டியார்
2. வைத்திலிங்க முதலியார்
3. R. திருநாவுக்கரசு முதலியார்

திருச்சிராப்பள்ளி

1. ராம. அண. அண்ணாமலைச் செட்டியார், அரிமழம்
2. எஸ். எல்லப்பச் செட்டியார், அரிமழம்
3. கி. ஆ பெ. விசுவநாதன்
4. G. வரதராஜ பிள்ளை, திருச்சி

இராமநாதபுரம்

1. எஸ். நாராயணன் செட்டியார், காரைக்குடி
2. சிடி எம், என். நாராயணன் செட்டியார், ஆத்தங்குடி
3. காசிநாததுரை, இராமநாதபுரம்
4. K. C. வேலாயுதம், ஸ்ரீவில்லிபுத்தூர்

மதுரை

1. இராதா தியாகராசன், மதுரை
2. புஷ்பம் நடராச நாடார், மதுரை
3. வித்துவான் ஔவை. சு. துரைசாமி பிள்ளை, மதுரை
4. பெருமாள்சாமி பிள்ளை, பழனி

திருநெல்வேலி

1. வி. எஸ். ஆறுமுகம் பிள்ளை, அம்பாசமுத்திரம்
2. எஸ் எஸ். அருணாசலம் பிள்ளை, திருநெல்வேலி
3. சிவ. ராம. அ. நடராச முதலியார், அம்பாசமுத்திரம்

வட ஆர்க்காடு

1. புரிசை முருகேச முதலியார், திருவண்ணாமலை
2. வி. எஸ். கணபதி முதலியார், பெருங்கட்டூர்

கன்னியாகுமரி

1. சி. வள்ளிநாயகம் பிள்ளை பி. ஏ., பி. எல்.
2. வித்துவான் சி. குமரேச பிள்ளை

சேலம்

1. அ. கு. காமாட்சியம்மையார், சேலம்
2. அப்பாய் செட்டியார், சேலம்

தர்மபுரி

1. C. M. ரத்னவேலு செட்டியார், தர்மபுரி
2. எம். ஆர். குணசீலன், தர்மபுரி

கோவை

1. C. S. கண்ணாயிரம், கோவை
2. கே. பி. ஆர். சுப்பராயன், சிவகிரி
3. நா. ஆறுமுகம், புன்செய்ப் புளியம்பட்டி

பெங்களூர்

1. ஏ. ஆர். அண்ணாமலை முதலியார்
2. எஸ். கனகசபாபதி பிள்ளை,
3. பதுமநாப முதலியார்

கொழும்பு

1. குல சபாநாதன்
2. அருள் தியாகராசா
3. சபாபதிப் பிள்ளை

திரிகோணமலை

1. பண்டித ஆர். வடிவேலு
2. எஸ். அம்பலவாணன்

மட்டக்களப்பு

1. க. அருணாசல தேசிகர்
2. பூபால பிள்ளை
3. கணபதி

மலாய் நாடு

1. சிவநேயன்
2. ஆ. மு. பெரியசாமி பிள்ளை
3. ஆர். வி. கந்தையா
4. எம். இராமசாமி முதலியார்
5. முரு. பழ. இரத்தினம் செட்டியார்

கல்கத்தா

1. என். என். தியாகராசன்; தமிழ் இலக்கியக் கழகம்
2. என்- சிங்காரம், பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்,
31-B ராஜாபசந்த ராய் ரோடு, கல்கத்தா-29

பம்பாய்

1. ஆர். முருகையா, 6–67 சரசுவதி காலனி, மாதுங்கா,
பம்பாய்-19

தில்லி

1. எம். எஸ். பி. சண்முகம் எம், ஏ., தில்லித் தமிழ்ச் சங்கம்
2. டாக்டர் பா. நடராசன்

"ஆங்கில சைவசித்தாந்தா ஆலோசனைக்" குழு

ஆசிரியர் : டாக்டர் V. A. தேவசேனாபதி எம். ஏ. பி. எச். டி.
துணையாசிரியர் : C. N. சிங்காரவேல் எம். ஏ.

ஆலோசனைக் குழு :

1. ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி.
2. K. கோதண்டபாணிப் பிள்ளை பி. ஏ.
3. கி. இராமலிங்க முதலியார் எம். ஏ.
4. க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ. எல். டி.
5. பெ. திருஞானசம்பந்தம் எம். ஏ. எல். டி.
6. மு. அருணசலம் எம். ஏ.

27—12—69 மாலை *3-30* மணிக்குக் காஞ்சிபுரம் இராசகோபால் கலியாண மண்டபத்தில் கூடிய சமாசப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்கள் வருமாறு :—

1. இக்கூட்டம் இவ்வாண்டு பின்வரும் அன்பர்கள் நம்மை விட்டுப் பிரிந்தமை குறித்து வருத்தம் தெரிவித்து அவர்களது ஆன்மா அமைதியுறப் பிரார்த்தித்து இரண்டு நிமிடங்கள் அமைதியில் ஆழ்ந்தது.

1. திரு. C. N. அண்ணாதுரை, சென்னை.
2. ,, வ. சிவகுமாரன், சென்னை.
3. ,, C. அமிர்தகணேச முதலியார், தஞ்சை.
4. ,, சுந்தரேச வாண்டையார், தஞ்சை.
5. ,, C. M. இராமச்சந்திரன் செட்டியார், கோவை.
6. திருமதி ருக்மணி அம்மையார் (திரு N. மகாலிங்கம் அவர்கள் தாயார்) பொள்ளாச்சி.
7. திரு. பண்டித அ. கந்தசாமி பிள்ளை.

2. ஆங்கில சைவசித்தாந்தா இதழைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும் உறுப்பினர்கள் அதற்குச் சந்தாதார்களைச் சேர்க்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சிவாத்வைத ஸ்தாபகாசார்யர்

ஸ்ரீகண்ட சிவாசாரியார் குருபூசை

(நல். மு.)

ஸ்ரீகண்ட சிவாசாரியார் ஸ்ரீ சங்கரர், இராமானுஜர், மத்துவர் என்ற மூன்று ஆசாரியர்கட்கும் மூந்தியவர் என்றும் அவர் இயற்றிய பிரம்ம சூத்திரபாஷ்யம் மிகவும் சிறப்புடையதென்றும் கற்றவர் உலகம் போற்றும், சிவ பரத்துவத்தையும் சைவ சித்தாந்தத்துக்கு ஒத்த ஏற்புடைய சிவாத்வைதத்தையும் ஸ்தாபனம் செய்த பூர்வாசாரியரை, சைவ உலகம் மறப்பது நன்றன்று. அவரது வாழ்க்கை வரலாறு இன்னும் விளக்கமாக ஆராய்ச்சி செய்யப்படவில்லை. (பேராசிரியர் சூரியநாராயண சாஸ்திரியாரின் ஸ்ரீகண்டரின் சிவாத்வைதம் என்ற நூலைக் காண்க). இவ்வாசிரியரது குருபூசை தினம் மாசி மாதம் கிருஷ்ணபக்ஷம் சப்தமி என்று தமிழ்ப் பேராசிரியர் எழுதியுள்ள 'ஸ்ரீ மணியசிவனார் வாழ்க்கை' என்ற நூலிலிருந்து காணப்படுகிறது. இந்நாளையே மேற்கொண்டு அனுஷ்டிக்கலாம். ஸ்ரீ சாஸ்திரி அவர்கள் எழுதிய ஸ்ரீகண்ட வணக்கம் பின்வருமாறு.

அறுசீர்க் கழிநெடிலடி. யாசிரிய விருத்தம்

கூடியமா ணுக்கர்தமக் கறிவுகொளுத்
திக்குடிலக் கொள்கை யோரைத்
தேடியவர் தமைவாதிற் புறங்காட்டிச்
செலத் தொலைத்துச் சிறந்தவாகை
சூடியநற் சித்தாந்த சைவமத
பாநுவினைச் சுத்தாத் வைத
பாடியஞ்செய் தருளியசீ கண்டசிவா
சாரியரைப் பணிந்து வாழ்வாம்.

இந்த அழகிய விருத்தத்தில் ஆசிரியர் ஸ்ரீகண்ட சிவாசாரியரை "சித்தாந்த சைவபாநு" என்று போற்றியுள்ளதைக் கண்டு மகிழ்க. அவர் பாஷ்யமும் சுத்தாத்வைதம். சிவாத்வைதம் என்று கூறப்படும் பெயர் பின்வந்தது போலும். எவ்வாறாயினும் ஸ்ரீகண்ட சிவாசாரியார் சைவர்களால் போற்றததக்கவர்கள் என்பதைச் சைவ உலகம் உணர்தல் நன்று.

திருநீற்றின் பெருமை.

(கொ. நீ. சி.)

"இது என்ன துணி? வெள்ளைத்துணி. நெருப்பில் போட்டால் என்ன ஆகும்? கருப்பாகும். இது என்ன காகிதம்? வெள்ளைக்காகிதம். நெருப்பில் போட்டால் என்ன ஆகும்? கருப்பாகும். இதைப் போலவே எல்லாப் பொருள்களையும் நெருப்பில் போட்டால் என்ன ஆகும்? கருப்பாகும். ஆனால் சாணம் என்ன நிறம்? கருப்பு நிறம். நெருப்பில் போட்டால் என்ன ஆகும்? வெண்மையான திருநீறாகும். சாணம் மட்டும் எதிர் நீச்சல் போடுகிறது.

வீட்டில் குழந்தைகளின் மலஜலங்களைக் கழுவி என்ன தெளிக்கிறார்கள்? ஃபெனாயில் தெளிக்கிறார்கள். அது என்ன செய்கிறது. எல்லாத் துர்நாற்றத்தையும் போக்கித் தன் நாற்றத்தை மட்டும் காட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் பழங்காலத்துத் தாய்மார்கள் என்ன தெளிக்கிறார்கள்? சாணம் தெளிக்கிறார்கள். அது என்ன செய்கிறது? எல்லாத் துர்நாற்றத்தையும் நீக்கித் தன் நாற்றத்தையும் காட்டிக் கொள்வதில்லை.

பாத்திரங்களுக்கு ஈயம் பூசினால் தாய்மார்கள் என்ன போடுகிறார்கள்? அவற்றில் சாணங்கரைத்து வைக்கிறார்கள். காரணம்? நவாசாரம் எனனும் விஷத்தைச் சாணம் நீக்கிவிடுகிறது. சாணம் எல்லா விஷக்கிருமிகளையும் போக்கிவிடும்.

நம் உடம்பில் எவ்வளவோ விஷக்கிருமிகள் இருக்கின்றன. அவற்றைப் போக்க சாணத்தைப் பூசலாமா? கூடாது. ஆனால் சாணத்தைப் புடம் போட்டுப் பூச வேண்டும். அயத்தை அயச் செந்தூரமாக்கி உண்டால் உடம்பிற்கு ஊட்டம் தரும். தங்கத்தைக் காட்டிலும் தங்க பஸ்பம் வலிமை தரும். அது போலச் சாணத்தைக் காட்டிலும் புடம் போட்ட சாணம், அதாவது திருநீறு, சக்தி வாய்ந்தது.

திருநீற்றை மந்திரம் சொல்லிப் பூசினால் உடம்பின் மேலுள்ள கிருமிகளை மட்டுமன்று உடம்பின் உள்ளே உள்ள வியாதிகளையும் போக்கும். திருஞான சம்பந்தர்

'மந்திரமாவது நீறு' என்று சொல்லித்தான் பாண்டியன் உடம்பின்மேல் நீறு பூசி நோயைப போக்கினூர். திருநீறு உடம்பிலுள்ள நோய்களை மட்டுமன்று உயிரின் மலங்களை யும் நீக்கும்''

குறிப்பு: இது திரு. முருக. கிருபானந்தவாரியாரின் சொற்பொழிவின் ஒரு பகுதி. திரு. முருக. கிருபானந்த வாரியாரின் சொற்பொழிவுகளில் என்ன இருக்கின்றன? சமயம், சாத்திரம், புராணம், இலக்கணம், இலக்கியம், இசை, இசை நுணுக்கம், உலக அனுபவம், ஒழுக்கம், இத் தனையும் நகைச் சுவையாகிய இனிப்புப் பூசிக் கொடுக்கப் படுகின்றன. மொத்தத்தில் நல்ல தமிழும், நல்ல சைவ மும், பாமரர்களும் படித்தவர்களும் விரும்பி அனுபவிக்கும் படிப் பரப்பப்படுகின்றன.

ஒரு வேண்டுகோள்

அண்மையில் காஞ்சியில் நிகழ்ந்த நம் சமாஜ மாநாட்டில் ஆங்கில ''சைவ சித்தாந்தா'' வைத் தொடர்ந்து நடத்துவதா நிறுத்திவிடுவதா என்ற பேச்சு நடந்தது. வந்திருந்த உறுப்பினர்கள் யாவரும் ''அது காலத்திற்கேற்ற முறையில் நம் சமயப் பண்பாட்டைக் கடல்கடந்தும் பரப்புவ தால் அவசியம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்'' என ஒருமித்த எண்ணத்தைத் தெரிவித்தனர். பலவூர்களி லிருந்து வந்திருந்தோர் யாவரும் தங்களூர்களிலிருந்து புதிய உறுப்பினர்களைச் ''சைவ சித்தாந்தா''வுக்குச் சேர்த்துத் தருவதாகவும் வாக்களித்தனர். அதனுல் அவ்வாங்கில இதழை இவ்யாண்டும் தொடர்ந்து நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

இது பற்றி நம் சமாஜ உறுப்பினர்கள் யாவரும் சிந்தித்துத் தாங்களும் உறுப்பினராவதோடு தங்களுக்குத் தெரிந்த ஆங்கிலம் படித்த நண்பர்களை நம் 'சைவ சித்தாந்தா''வுக்கு உறுப்பினர்களாக்கும் படி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம். கடல்கடத்த நாடுகளில் இதற்கு நல்ல வரவேற்புள்ளது. ஆகவே இதனை வளர்த்து நம் சைவ சித்தாந்தச் சிறப்பினை உலகறியச் செய்ய உங்களால் இயன்ற பணி இதற்கு உறுப்பினர்களைச் சேர்த்துத்தருவதே என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். உடனே முயன்று ஆவன செய்மின். (அம்பை)

ஆண்டு உறுப்பினர் கட்டணம் 5-00
ஆயுள் உறுப்பினர் கட்டணம் 100-00

உ

சிவமயம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

(தொடக்கம்-1905—பதிவு-1915)

64ஆவது ஆண்டு அறிக்கை

சைவ சித்தாந்த மகா சமாஜம் முதன் முதலில் திருப்பாதிரிப்புலியூரில் தவத்திரு ஞானியாரடிகள் திருமடத்தில் அவர்கள் முன்னிலையில் அருள்திரு மறைமலை யடிகளாரால் விசுவாவசு ஆண்டு ஆனித் திங்கள் 24ஆம் நாள் (7-7-1905) வெள்ளிக்கிழமை தொடங்கப்பெற்றது. சிவபெருமான் திருவருளால் இன்றுவரை மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்க வேண்டுமென்ற பெருநோக்கத்துடன் அது தொண்டாற்றி வருகின்றது. இச்சமாஜம் சபைகளுக்குரிய பதிவுச் சட்டப்படி எண் 6/1915—16 எண்ணில் 11-11-1915ஆம் தேதியில் பதிவு செய்யப்பெற்றுள்ளது.

2. இவ்வாண்டின் சமாஜப் பணியாளர்கள்

தலைவர்	:	வித்துவான் - திரு. கோ. மு. முத்துசாமிபிள்ளை, ஐ. ஏ. எஸ். (ஓய்வு)
துணைத்தலைவர்கள்	:	திரு. இராவ்பகதூர் க. அரங்கசாமி முதலியார், பி.ஏ. திரு. K. E. அருணசல முதலியார், எம்.ஏ., பி.காம்.

செயலாளர் : திரு. மு. நாராயணசாமி முதலியார்

துணைச்செயலாளர் : திரு. மா. சிவராமன், பி.ஏ.

பொருளாளர் : திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியார், எம்.ஏ., பி.டி.

சித்தாந்தம் ஆசிரியர் : திரு. மு. அருணசலம், எம்.ஏ.

சித்தாந்தம் துணையாசிரியர்: வித்துவான் - திரு. அம்பை. இரா. சங்கரனர்

மாதக் கணக்குத் தணிக்கையாளர் : திரு. வி. ஆறுமுக முதலியார்

ஆண்டுக் கணக்குத் தணிக்கையாளர் : திரு. V. திருநாவுக் கரசு, பி ஏ.

செயற்குழுவினர் :

1. திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார், எம்.ஏ.
2. திரு. நல். முருகேச முதலியார், பி.ஏ. (28-12-68 முதல் 1-2-69 முடிய)
3. திரு. P. திருஞானசம்பந்தம், எம்.ஏ., எல்.டி.
4. திரு. அய்யா சுப்பிரமணிய முதலியார்
5. திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், எம்.ஏ.
6. திரு. கீ. இராமலிங்க முதலியார், எம்.ஏ.
7. வித்துவான் – திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை
8. வித்துவான் - திரு. பி. சொ. சண்முகம் பிள்ளை
9. திரு. கொ. நீ. சிங்காரவேலு, எம்.ஏ.
10. : வித்துவான்-பாலூர்-கண்ணப்ப முதலியார், எம்.ஏ., பி.ஓ.எல்.
11. திரு. P. முத்துக்குமாரசாமி நாயனர்
12. திரு. புலவர்-நா. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
13. திரு. N. குருசாமி பிள்ளை, பி.ஏ. (2 2-69 முதல்)

3. அறுபத்து மூன்றாவதாண்டு நிறைவு விழா

நம் சமாஜத்தின் 63ஆவதாண்டு நிறைவு விழாவும் சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும் 27, 28, 29-12-69 ஆகிய நாள்களில் சென்னை மயிலாப்பூர் கற்பகாம்பாள் கபாலீச்சுரர் திருக்கல்யாண மண்டபத்தில் மிகச் சிறப்பாக நிகழ்ந்தன. திருவாசகமணி - திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், டாக்டர் திருமதி தாரா நடராசன் அம்மையார், எம்.பி., பி.எஸ்., திரு. கே. இ. அருணாசலம், எம்.ஏ., பி.காம். ஆகியோர் முறையே மூன்று மாநாடுகளுக்கும் தலைமை தாங்கினர். திரு. அய்யா சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வரவேற்புரையும் அருள்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் திறப்புரையும் ஆற்றினர்.

இம்மாநாட்டில் சமாஜம் தோற்றுவிக்க மூலகாரணர்களாயிருந்த அருள்திரு. ஞானியார் அடிகள், அருள்திரு. மறைமலையடிகள் படத்திறப்புகள் நிகழ்ந்தன. மேலும் திருவாசகம் திருத்திய பதிப்பு, Saiva Cult and Heritage என்னும் ஆங்கில நூல், 63ஆம் ஆண்டு விழா மலர், திருமந்திரச் சம்பிரதாயம், காயசித்தி ஆகிய வெளியீடுகள் வெளியிடப்பெற்றது சிறப்பாகக் குறிக்கத்தக்கது. இம்மாநாடு சிறப்புற நிகழ உதவிய அன்பர்கள் யாவருக்கும் சமாஜம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

4. சைவ சமய குரவர் விழாக்கள்

திருவாளர் - அ. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் நன்கொடையான நம் சமாஜக் கட்டட வாரியத்திலிருந்து நம் சமாஜச் சார்பில் சைவ சமய குரவர் விழாக்கள் கீழ்க்காணுமாறு சிறப்புற நிகழ்ந்தன.

1-6-69-ல் திரு. கொ. நீ. சிங்காரவேல், எம்.ஏ. அவர்கள் "அப்பர்" பற்றியும், 2-6-69-ல் திரு. சே. த. கிருட்டினசாமி முதலியார், எம்.ஏ., பி.டி. அவர்கள் "சம்பந்தர்" பற்றியும், 20-6-69-ல் திரு. நா. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். அவர்கள், மாணிக்கவாசகர்" பற்றியும், 22-7-69-ல் வித்துவான்-திரு. பாலூர் - கண்ணப்ப முதலியார், எம்.ஏ. அவர்கள் "சுந்தரர் செந்தமிழ்" பற்றியும் விரிவுரையாற்றினர். இச் சொற்பொழிவுகள் யாவும் திருமயிலைக் கபாலீச்சரத்தில் நிகழ்ந்தன.

5. சேக்கிழார் விழா

3-6-69 அன்று வித்துவான் - திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் கபாலீச்சரத்தில் "சேக்கிழார்" என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றினார்கள்.

6. மெய்கண்டார் விழா

மலேயா திரு. கா. இராமநாதன் செட்டியார் நினைவுக் கட்டளை நிதியிலிருந்து 5-11-69 முதல் 9-11-69 முடிய 5 நாள்கள், சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் சித்தாந்தக் கலைச்செல்வர் திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி. அவர்கள் மெய்கண்டார் விழாவினை ஒட்டிச் சிவஞானபோதக் கருத்தை ஐந்து சொற்பொழிவுகளாகத் தொகுத்து விரிவுரையாற்றினார்கள். தினந்தோறும் ஐயந்தெளிதல் என்னும் நிகழ்ச்சியும் சொற்பொழிவின் முடிவில் பொதுமக்களுக்கு மிகப் பயன் தரத்தக்கதா யமைந்திருந்தது.

7. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் அறக்கட்டளைகள் (2)

சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் நம் சமாஜ மேற்பார்வையில் இரு அறக்கட்டளைகளை ஏற்படுத்தியிருப்பது யாவருக்கும் தெரிந்ததே. அக்கட்டளை

களின்படி 9-2-69-ல் வித்துவான் - திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் "ஞானியார் அடிகள்" என்பது பற்றியும், 10-2-69-ல் வித்துவான் - பாலூர் - கண்ணப்ப முதலியார், எம்.ஏ. அவர்கள் "திருநீலகண்டர்" என்பது பற்றியும் கபாலீச்சுரத்தில் பேசினர்.

20-4-69-ல் வித்துவான் - திரு. அம்பை. சங்கரனர் திருமயிலை வெள்ளீச்சுரர் ஆலயத்தில் "மங்கையர்க்கரசியார்" என்பது பற்றி விரிவுரை யாற்றினர்.

4-5-69-ல் வெள்ளீச்சுரர் ஆலயத்தில் நாகர் கோயில் வித்துவான் - திரு. சி. குமரேச பிள்ளை அவர்கள் "உமாபதி சிவம்" பற்றிப் பேசினர்கள்.

13-6-69-ல் இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் திரு. சே. த. இராமலிங்கம்பிள்ளை, பி.ஏ., பி.டி. அவர்கள் "பாம்பனடிகள்" என்னும் பொருள் பற்றிப் பேசினர்கள்.

8. மாதச் சிறப்புக் கூட்டம்

6-4-69 அன்று குலசை. திரு. ப. இராமநாத பிள்ளை அவர்கள் தலைமையில் குன்றத்தூரிலும் மாங்காட்டிலும் பங்குனி மாதச் சிறப்புக் கூட்டங்கள் நிகழ்ந்தன. அன்பர்கள் பலர் சைவ சமய விளக்கச் சொற்பொழிவுகளாற்றினர். குன்றத்தூரில் திரு. பாலசுப்பிரமணியனர், மாங்காட்டில் திரு. பொன்னம்பலனர் முதலிய பெருமக்கள் பலர் முன்னின்று இக்கூட்டங்களை இவ்விரு இடங்களிலும் மிகச் சிறப்புற நடத்தித் தந்தனர். அவர்கள் யாவருக்கும் சமாஜம் நன்றி தெரிவித்துக்கொள்கின்றது.

9. சமாஜச் சிறப்புக் கூட்டங்கள்

29-1-69-ல் திருமயிலைக் கபாலீச்சரத்தில் சித்தாந்த வித்தகர் திரு. முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் அவர்கள் "சைவ சித்தாந்தச் சிறப்பியல்புகள்" என்னும் அரும்பொருள் பற்றி ஓர் அரிய விரிவுரையாற்றினார்கள்.

16-6-69-ல் இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் மதுரை திருஞானசம்பந்தராதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் சமாஜப் பேரன்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் அருளுரை வழங்கினார்கள்.

10. காலைக் கூட்டு வழிபாடு

மலேயா திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் நம் சமாஜச் சார்பில் தொடங்கி வைத்த காலைக் கூட்டுவழிபாடு நாள்தோறும் திருமயிலைக் கபாலீச்சுரத்தில் தவறாது நிகழ்ந்து வருகின்றது.

11. மழை வேட்டல்

திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்களால் நிறுவப் பெற்ற நம் சமாஜக் கட்டிட வாரிய நிதியிலிருந்து சமாஜச் சார்பில் 15-5-69 முதல் 19-5-69 முடிய திருமயிலைக் கபாலீச் சுரத்தில் தினந்தோறும் மாலை 6 மணி முதல் 8 மணி வரை மழை வேட்டல் கருதி மேகராகக் குறிஞ்சிப் பண்ணிலுள்ள எழு தேவாரத் திருப்பதிகங்களையும் ஓதுவார் மூர்த்திகள் பலரைக்கொண்டு ஓதச் செய்தோம். மழையின்மை, நீரின்மை அகன்று வளம்தர இறையருள் வேண்டியும் மக்கள் நலம் பெறல் கருதியும் இம்முயற்சி மேற்கொள்ளப்பெற்றது. அடுத்த நாளே திருவருள் துணைசெய்யப் பெருமழை பெய்தது.

12. பெரிய புராண விரிவுரை

நம் சமாஜப் புது அலுவலகத்தில் பெரியபுராண விரிவுரை சென்ற ஆண்டு தொடக்கப் பெற்று இந்த ஆண்டு சில திங்கள் நிகழ்ந்தது.

13. சமாஜத் தேர்வு

1969ஆம் ஆண்டு 6 பேர் சைவப் புலவர் தேர்விலும் 3 பேர் இளஞ் சைவப் புலவர் தேர்விலும் கலந்து கொண்டனர். திருச் சிற்றம்பலம், சென்னை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தேர்வுகள் நிகழ்ந்தன. பிற விவரங்கள் பின்னர்ச் சித்தாந்தத் தில் வெளியிடப்பெறும்.

14. ஆங்கில இதழ் "சைவ சித்தாந்தா"

நம் சமாஜத்தின் அறுபதாண்டு நிறைவு விழாவின்போது தொடங்கப்பட்ட ஆங்கில முத்திங்களிதழ் "சைவ சித்தாந்தா", இவ்வாண்டும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இவ்விதழுக்கு அமெரிக்கா, ரஷ்யா, ஆஸ்திரேலியா, ஜப்பான், மேற்கு ஜெர்மனி, பீஜி முதலிய மேனாடுகளில் நன்கு வரவேற்பு இருக்கிறது. நம் தமிழகத்தில் நிறைய உறுப்பினர்கள் சேராத தால் போதிய பண வரவில்லை என்பது கூறாதே அமையும். இருப்பினும் இவ்விதழ் சிறக்கப் பல வகைகளிலும் முயன்று வரும் நம் தலைவர் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளையவர் களுக்குச் சமாஜத்தின் பாராட்டு என்றும் உரியது. இவ்விதழின் முன்னாள் ஆசிரியர் திரு. நல். முருகேச முதலியார், பி.ஏ. அவர் களுக்கும் தற்பொழுதைய ஆசிரியர் டாக்டர் வி. ஏ. தேவ சேனபதி, எம்.ஏ., பிஎச்.டி. அவர்களுக்கும் மற்றும் கட்டுரை கள் எழுதித்தரும் பெரியோர்களுக்கும் சமாஜம் தம் நன்றியறி தலைத் தெரிவித்துக் கொள்கிறது. இதற்குப் போதிய ஊக்கம் பொது மக்கள் தருவார்களானால் மிக நன்முறையில் நிலையாக இதனை நடத்தலாமென்பதுறுதி. தற்போது இது அதிகச்

செலவில் நிகழ்வதால் அந்நிலையிலிருந்து நீக்கப் பல நம் சைவ சமய நிலையங்களும் சைவப் பெரியார்களும் இதற்குறுப்பினர் களாகச் சேரவேண்டுகின்ரேம்.

15. பொதுக்குழு, செயற்குழுக் கூட்டங்கள்

இவ்வாண்டுப் பொதுக் கூட்டங்கள் இரண்டும் செயற் குழுக் கூட்டங்கள் பதினென்றும் நடைபெற்றன.

16. பொருள் நிலை

1-12-68 முதல் 30-11-69 முடிய 12 மாதங்களின் வரவு செலவுக் கணக்குகளிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடுகள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன. " சைவ சித்தாந்தா " ஆங் கில முத்திங்களிதழின் வரவு செலவுத் தொகுப்பேடும், சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டடப் பொறுப்பு வாரிய வரவு செலவுக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடும் இத னுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன.

17. வேண்டுகோள்

சமாஜத் தொண்டு இன்னும் சிறந்து மிளிர வேண்டுவன பலவுள. உடனடியாகக் கட்டடம் தேவை. தற்போது இரு அறைகளில் வாடகைக்கு சமாஜ நிலையம் இயங்கி வருகின்றது. கட்டடநிதிக்கென மணலி திரு. இராமகிருஷ்ண முதலியார் ரூ. 4000/-தந்துள்ளார்கள். அவர்கள் கொடுக்க இசைந்த மீதி ரூ. 2000/-ஐயும் விரைவில் எதிர்பார்த்துக் கொண்டிருக் கிரேம். மலேயாவாழ் பேரன்பர் திரு. சிவநேசன் அவர்கள் ரூ. 1000/ - (ரூபாய் ஆயிரம்), வித்துவான் - திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் ரூ. 100/ (ரூபாய் நூறு) கட்டட நிதிக்கென நன்கொடையாக உதவியுள்ளார்கள். அவர் களைப்போன்று தக்கவர் பலரும் முன்வருவரேல் சமாஜக் கட்டடக் குறை விரைவில் நீங்குவதுறுதி. அன்பர்கள் ஆவன செய்ய முன் வருவார்களாக.

தற்போது சமாஜ உறுப்பினர் எண்ணிக்கை 673 (சாதாரண உறுப்பினர் 470; ஆயுள் உறுப்பினர் 181; இனும் மாற்றுப்பிரதிகள் 22 = 673) ஆக உள்ளது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் சித்தாந்தம் இதழ் இலவசமாக அனுப்பப்படுகிறது. 64 ஆண்டுகளாக அரும்பணி ஆற்றிவரும் சமாஜ உறுப்பினர் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டுமென்பது கூருதேயமையும். சமாஜ உறுப்பினர் யாவரும் அவ்வம்மாவட்டங்களில் முயன்று உறுப்பினர் எண்ணிக்கையை மேம்படுத்த முயல்வார்களாக.

18. நன்றி

சைவ சித்தாந்த மகா சமாஜத்தைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்த உயர்திரு மறைமலையடிகளார், தவத்திரு. ஞானியார் சுவாமிகள், திரு. ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை ஆகியோருக்கும் சமாஜத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட திரு. வி. கலியாணசுந்தரனுர், திரு. ம. பாலசுப்பிரமணி முதலியார் போன்ருேருக்கும் சமாஜம் வணக்கமும், நன்றியும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. மற்றும் பல்லாற்ருனும் சமாஜப்பணியில் ஈடுபட்டுவரும் அன்பர்கள் அனைவருக்கும் சமாஜக் கூட்டங்களை நடத்த உதவிய திருமயிலைக் கபாலீச்சுரத்தினர், வெள்ளீச்சுரர் ஆலயத்தினர், இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையினர் முதலிய நிலையத்தாருக்கும் சமாஜம் நன்றி தெரிவித்துக்கொள்கின்றது. சமாஜப்பணி சிறக்கவும், சைவம் தழைத்தோங்கவும் எல்லாம் வல்ல சிவபெருமான் இன்னருள் சுரப்பாராக.

செயற்குழுவினர் அனுமதிப்படி
இங்ஙனம்

சென்னை
21—12—'69

மு. நாராயணசாமி
மா. சிவராமன்
செயலாளர்கள்

சைவ சித்தாந்த மகா சமாஜ 64-ஆம் ஆண்டு வரவு செலவுத் தொகுப்பேடு

(1—12—68 முதல் 30—11—69 வரை)

வரவு	ரூ.	பைசா
முன் கையிருப்பு	3	42
முன் பாங்கு இருப்பு (S. B. Account)	1352	75
தவணை வைப்பு நிதி	16600	00
சந்தா முதலியன	2593	00
ஆயுள் சந்தா	750	00
மணிவிழா நன்கொடை	60	00
கட்டட நன்கொடை	100	00
சிறப்பு நாட்கள்	100	00
ஆண்டு விழா வரவேற்புக்குழு	2050	00
பதிவுத் தொகைகளின் வட்டி	1066	98
தேர்வுக் கட்டணம்	61	00
புத்தக விற்பனை	559	45
திருவாசக அச்சு	439	00
	25735	60

செலவு	ரூ.	பைசா
அச்சுக்கூலி முதலியன	1474	16
காகிதம் முதலியன	769	35
தவணை வைப்பு நிதி	17500	00
மணிவிழா பட்டாடைகள்	167	05
திருமண வாழ்த்து மாலை முதலியன	55	50
சிறப்பு நாட்கள்	377	45
பழைய அலுவலக மின்சாரக் கட்டணம்	24	00
புது அலுவலக வாடகை	352	00
எழுத்து வகைச் சாமான்களும் பிறவும்	25	73
1967-68 தேர்வுப் பரிசு	100	00
முருகன் முந்நூல் அச்சு வகை	396	56
தட்டச்சு	2	50
ஆண்டு விழா வரவேற்புக் குழுவுக்கு	2050	00
ஆங்கில இதழுக்கு	383	82
தபால் வகை	644	80
போக்கு வரவு	212	95
கையிருப்பு	21	66
பாங்கு இருப்பு (S. B. Account)	1178	07
	25735	60

சமாஜத்தின் தற்காலப் பொருள் நிலை

வைப்பு நிதி விவரம் :	ரூ.	பைசா
மலேயா சைவ சித்தாந்த சபையார் தந்தது	1000	00
சைவத் தேர்வுப் பரிசுக்கு ஓர் அன்பர் தந்தது	1000	00
சமயக் கட்டளைகட்குத் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தந்தது (I & II)	2000	00
1963-ஆம் ஆண்டிலிருந்து சேர்ந்த ஆயுள் உறுப்பினர் தொகை	4500	00
சங்க இலக்கிய வெளியீட்டு உரிமை வரவு	1000	00
மலேயா திரு. சிவநேசன் செட்டியார் கட்டட நன்கொடை	1000	00
மலேயா திரு. கா. இராமநாதன் செட்டியார் சமயக் கட்டளை	1000	00
மணலி - திரு. இராமகிருஷ்ண முதலியார் கட்டட நன்கொடை	4000	00
சமாஜ இருப்புத் தொகை	2000	00
மற்றைய நிதி விவரம் :		
ஆங்கில முத்திங்கள் வெளியீட்டுக்குக் கடனாகத் தந்தது	2173	64
கையிருப்பு	21	66
பாங்கு இருப்பு	1178	07
கையிருப்புப் புத்தகங்களின் (விற்பனை மதிப்பு)	5603	72
	26477	09

V. திருநாவுக்கரசு,
ஆண்டுத் தணிக்கையாளர்.

வா. ஆறுமுகம்,
மாதத் தணிக்கையாளர்.

நே. த. கிருஷ்ணசாமி,
பொருளாளர்.

மு. நாராயணசாமி,
மா. சிவராமன்,
செயலாளர்கள்.

'சைவ சித்தாந்தா' ஆங்கில முத்திங்கள் இதழின் வரவு செலவுத் தொகுப்பு

1—12—68 முதல் 30—11—69 வரை

வரவு	ரூ.	பைசா	செலவு	ரூ.	பைசா
முன் கையிருப்பு	5	87	ஆங்கில இதழ் அச்சுக்கூலி	1580	71
,, பாங்கு இருப்பு	943	51	காகிதம்	779	31
1968—1969 சந்தா	971	97	பணியாள் சம்பளம்	106	00
விளம்பரம்	660	00	கட்டுரைகள் டைப் அடித்தது	64	50
நன்கொடை	400	00	தபால் செலவு	278	30
பாங்கு வட்டி	26	16	வண்டிச் செலவு	22	40
1969—2, 3 ஆங்கில இதழ்களுக்குக் காகிதம் வாங்கப் பொதுக் கணக்கிலிருந்து வரவு	383	82	பிற செலவுகள்	7	75
			அச்சகத்திற்கு முன் பணம் தந்தது	200	00
			ரொக்க இருப்பு	5	71
			பாங்கு இருப்பு	346	65
	3391	33		3391	33

குறிப்பு : 1969 நவம்பர் 30உ வரை பொதுக் கணக்குக்குத் தரவேண்டியது ரூ. 2173 64

V. திருநாவுக்கரசு, ஆண்டுத் தணிக்கையாளர்.

வா. ஆறுமுகம், மாதத் தணிக்கையாளர்.

நே. த. கிருஷ்ணசாமி, பொருளாளர்.

மு. நாராயணசாமி,
மா. சிவராமன்,
செயலாளர்கள்.

சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டடப் பொறுப்பு வாரியம்
(எண் 2, 3, 4, ஈவினிங் பஜார் கடைகள்) வரவு செலவுத் தொகுப்பு
1—12—68 முதல் 30—11—69 வரை

வரவு	ரூ.	பைசா	செலவு		ரூ.	பைசா
சென்ற ஆண்டு இருப்பு	166	45	தேவார ஆசிரியர் சம்பளம்		960	00
பாங்கு இருப்பு	705	68	மேற்படியார்க்கு நன்கொடை		100	00
வாடகை வரவு	2880	00	திரு. சந்திரசேகர முதலியார் சம்பளம்		250	00
பாங்கு வட்டி வரவு	28	39	திரு. க. சோமசுந்தரஞ் செட்டியார்		55	00
			திரு. முருகேச முதலியார் நன்கொடை		60	00
			அப்பர் இல்லம் திருவதிகை	,,	100	00
			சிவனடியார் திருக்கூட்டம்	,,	50	00
			நால்வர் திருநட்சத்திரம்		100	00
			மழை வேட்டல்		131	45
			முனிசிபல் வரி		531	08
			ரிபேர்		15	00
			சமாஜ அறை வாடகை		330	00
			தபால் செலவு முதலியன		2	10
			ஆண்டு இறுதியில் இருப்பு		132	90
			பாங்கு இருப்பு		962	69
	3780	22			3780	22

குறிப்பு : சமாஜம் தரவேண்டிய ரூபா 400/-

அ. சோமசுந்தரஞ் செட்டியார்,	வா. ஆறுமுக முதலியார்,	நே. த. கிருஷ்ணசாமி முதலியார்
தலைவர்	தணிக்கையாளர்	பொறுப்பு நிர்வாகி

சமாஜ வெளியீடுகள்

	ரூ.	பைசா
திருவாசகம் (எட்டாம் திருமுறை)	1	00
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (ஒன்பதாம் திருமுறை)	1	00
சமாஜ 63-ஆம் ஆண்டு விழா மலர்	0	50
காயசித்தி	1	00
திருமந்திரச் சம்பிரதாயம்	0	50
சைவ சமயச் சொற்பொழிவுகள்	2	00
ஞானியாரடிகள் நினைவுமலர்	1	00
முருகன் மூன்நூல்	0	50
அறுபத்து மூவர்	0	06
வைர விழா மலர்	2	00
அறப்பயிற்சிமாலை	0	50
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல—120 காரணங்கள்	0	50
திருமயிலையும் பூம்பாவையும்	0	50
முருக வழிபாடு அல்லது முருக தத்துவ அருள் விரத வழிபாடு	0	75
பிரதோஷ வழிபாடு	0	20
நான் நம்புவன சில	0	10
விநாயகர் வழிபாடு	0	20
கூட்டுவழிபாட்டுப் பாமாலை	0	20
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி— பொன் விழா வெளியீடு	1	25
கந்தரனுபூதி—யந்திர உரையுடன்	1	25
சிவஞானபோதம்—எளியவுரை 2ஆம் பதிப்பு	1	00
திருவெம்பாவை—விசேட உரையுடன்	0	75

பாம்பன் - ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள் நூல்கள்

தற்போது கிடைக்கக்கூடியவை :

சைவ சமய சரபம்	2	50
நாலாயிரப் பிரபந்த விசாரம்	1	00
சேந்தன் செந்தமிழ் மூலமும் உரையும்	1	50
செவியறிவுறூஉ	0	20

	ரூ.	பைசா
பாம்பன் - ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம்	1	50
சிறுநூற்றிரட்டு	1	25
ஸ்ரீமத் அருணகிநாத சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்	0	30
சிவஞான தீபம்	0	50
சைவ மகிமையும் சுருக்க அனுட்டான விதியும்	0	50
ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும், குரு சீட சம்பவ வரலாற்று வியாசமும்	2	50
சமயங்களைக் குறித்த வியாசம்	1	25
சுத்தாத்வைத நிர்ணயம்	0	50
பரிபூரணானந்த போதம்-சிவசூரியப்பிரகாசம் என்னும் உரையுடன்	6	50
குமார சுவாமிய மூலமும் திருவிளையாடற் காண்டத்துப் பொழிப்புரையும்	7	50
சிவஞான தேசிகம் 1-வது கடவுளைக் குறித்த வியாசம்	1	25
சிவஞான தேசிகம் 2-வது தேவர்களைக் குறித்த வியாசம் முதலியன	0	60

தபால்—ரயில் செலவு தனி.

"**சித்தாந்தம்**"—சிறந்த மாதப் பத்திரிகை

ஆண்டுச் சந்தா ரூ. 5.   ஆயுள் சந்தா ரூ. 50.

"**சைவ சித்தாந்தா**"—ஆங்கில முத்திங்கள் வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூ. 5.   ஆயுள் சந்தா ரூ 100.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4

முருகன் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14

நம் சமாஜச் சார்பில் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் கட்டளையின்படி மயிலாப்பூர் கபாலீச்சுரத்தில் 30-1-70 வெள்ளி மாலை காஞ்சிபுரம் முதுபெரும் புலவர் திரு. பொன். சண்முகனார் அவர்கள "ஞானியார் அடிகள்" என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினார்கள். அங்கேயே 31-1-70 சனிக்கிழமை மாலை சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் A. S. கோவிந்தராஜனார் அவர்கள் "திருநீலகண்டர்" என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றினார்கள்.

மாசித்திங்கள் சிறப்பு நாள்கள்

13 (24–2–70) அத்தம்—எறிபத்த நாயனார் விழா
20 (3–3–70) பூராடம்—காரி நாயனார் விழா
24 (7–3–70) சதயம்—கோச்செங்கட் சோழ நாயனார் விழா.

பிறசெய்திகள்

கோவை மாவட்ட அருள்நெறித் திருக்கூட்ட மாவட்ட மாநாடு 10, 11–1–1970 ஆம் நாள்களில் கோவை சன்மார்க்க சங்க மண்டபத்தில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. அடிகள் பலரும் புலவர் பெருமக்கள் பலரும் கலந்து மாநாட்டினைச் சிறப்புற நடத்தினர்.

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் சார்பில் 11-1-70 ல் காஞ்சிச் சிவதலவார வழிபாடும் 16-1-70, 30-1-70 ல் தை வெள்ளி வழிபாடும், 22–1–70 ல் ஞானியார் சுவாமிகள் திருநாளும் 30-1-70 ல் மெய்கண்டதேவர் தை சுவாதித் திருநாளும் சிறப்புற நிகழ்ந்தன. புலவர் பெருமக்கள் பலர் விரிவுரையாற்றிச் சிறப்பித்தனர்.

காவேரிப் பாக்கம் சன்மார்க்க வாரவழிபாட்டுச் சங்க எட்டாம் ஆண்டு நிறைவு விழா 6, 7, 8-2-70 ஆம் நாள்களில் கொங்கணேசுவரர் ஆலயத்தில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. பெருமக்கள் பலர் சமய விரிவுரைகளாற்றினர்.

மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையின் வயிரவிழா 8—2—70 ஞாயிறன்று சிறப்புற நிகழ்ந்தது. டாக்டர். தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், டாக்டர். மு. வரதராசனார், திரு. நெ. து. சுந்தரவடிவேலனார் போன்ற பெருமக்கள் பலர் பங்கு கொண்டு விழாவைச் சிறப்பித்தமையோடு சொற்பொழிவுகளுமாற்றினர்.

இராஜ கணபதி பிள்ளை மறைவு

காரைக்கால் பிரபல வக்கீலும் பத்திரப் பதிவாளரும் சைவாபிமான சீலரும், சமாஜ உறுப்பினரும் பேரன்பரு மாகிய இராஜ கணபதி பிள்ளை 4—1—70 அன்று சிவபதம் அடைந்தார். புதுச்சேரியில் இவர் 13—8—1899இல் பிறந்தார். இளமையிலேயே சடாட்சர உபதேசம் பெற்ருர். சென்னையில் B. A., B. L. பட்டம் பெற்றுக் காரைக்காலில் உத்தியோகத்தில் அமர்ந்தார். சூரியனூர் கோயில் ஆதினத்து மகா சன்னிதானமான மீனுட்சிசுந்தர தேசிக சுவாமிகளிடம் நிர்வாண தீட்சை வரையில் பெற்ற வர். எல்லாச் சிவத்தலங்களையும் தரிசித்தவர்; இமயமலை யிலுள்ள தலங்களை எல்லாம் தரிசித்தவர். காரைக்காலி லுள்ள சைவ வித்தியாச்சிரமத் தலைவராகவும் பொருளாள ராகவும் விளங்கி, காரைக்காலம்மையார் விழா முதலிய வற்றை மிக்க சிறப்போடு நடத்தி வந்தவர். விருந்தோம்ப லில் சிறந்தவர். ஆண்டுதோறும் ஏதேனும் ஒரு சைவ நூலை வெளியிட்டு வினியோகம் செய்தவர். காஞ்சி சமாஜக் கூட்டத்துக்கு அவர் வரவில்லை; அதற்கு முந்தி நடந்த சமாஜ விழாக்கள் பெரும்பாலனவற்றில் தம் குடும்பத்தோடு வந்து கலந்து கொண்டிருக்கிருர். சைவ உலகத்தில் அனேகமாக எல்லோருக்கும் பழக்கமானவர். அன்பும் பண்பாடும் நிரம்பியவர். அவர் காலமானபோது எழுபது வயது. 22—7—69இல் அவருடைய ருத்ராபிஷே கம் என்னும் எழுபதாண்டு விழா நடைபெற்றது. மூன்று மாதங்களுக்கு முன் அவர் இல்லத்தில் யாம் சென்று பார்த்தபோது மிகவும் தளர்ந்த நிலையில் இருந்தார். சிவபெருமான் அவருடைய ஆன்மாவுக்கு மேலான முத்தி அளித்திருப்பான் என்பது உறுதி. சம்பிரதாயமான முறையில் அவருடைய ஆன்மா இறைவனது பேரானந்தப் பெருவாழ்வில் திளைக்க அருள் பாலிக்குமாறு ஆண்டவனை வேண்டுகிருேம். (ஆசிரியர்)

நம் சமாஜ ஆயுள் உறுப்பினர் திரு. V. S. தியாகராஜ முதலியார் அவர்கள் அருமைத் தந்தையார் திரு. G அரங்க நாத முதலியார் அவர்கள் 28—1—70 அன்று காலமான செய்தி கேட்டு வருந்துகின்ருேம். அப் பெரியார் நம் சமய நிறுவனங்கள் பலவற்ருேடு தொடர்பு கொண்டு கண்ணி னைக் காக்கின்ற இமையிற் காத்தவர்கள். அப் பெரியார் ஆன்மா ஆடவல்லான் திருவடிக் கீழ் இன்பமார்ந்திருக்க அவனருளையே வேண்டி வழுத்துகினமேுரம்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M Arunachalam, M A., and Published by S. Satchidanandam Pillai, B A., L.T., for the Saiva Siddhantha Samajam, 12, East Mada St., Mylapore. Madras-4.